**க.து.ந.க.எண்.பி1 / 620/ 2020**

**தீர்மான எண்.308/2020** **நாள்:02-05-2020**

**COVID-19 - மதிப்பீடு 2020-2021 - கட்டடத்துறை - கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், TNSCB மற்றும் TNHB குடியிருப்புகளில் தனிமைப்படுத்தும் அறைகளில் Supplying and fixing of patient steel cot size: Length 72" Breadth 35, Height 24", 18 gauge Sheet with frame made of 11/2"X1/8," 3Nos.vertical tube support for head bow with 3" foam mattress covered with rexin (6500 எண்ணிக்கையில்) கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.9,16,56,500/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி .**

கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்துதலுக்கான கட்டமைப்பு வசதிகள் ஆகிய இடங்களில் Supplying and fixing of patient steel cot size: Length 72" Breadth 35, Height24", 18 gauge Sheet with frame made of 11/2"X1/8," 3Nos.vertical tube support for head bow with 3" foam mattress covered with rexin 5000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி தீர்மான எண்.288./2020, நாள்09.04.2020ன்படி அனுமதி பெறப்பட்டு படிப்படியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது இரண்டாம் கட்டமாக மேலும் 6500 எண்ணிக்கையில் Supplying and fixing of patient steel cot size: Length 72" Breadth 35, Height24", 18 gauge Sheet with frame made of 11/2"X1/8," 3Nos.vertical tube support for head bow with 3" foam mattress covered with rexin கொள்முதல் செய்யப்பட வேண்டி உள்ளது.

ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் தேவையான இடங்களில் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்ட விலையிலேயே இந்த கொள்முதலும் செய்யலாம் என கருதப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், TNSCB மற்றும் TNHB குடியிருப்புகளில் தனிமைப்படுத்தும் அறைகளில் Supplying and fixing of patient steel cot size: Length 72" Breadth 35, Height24", 18 gauge Sheet with frame made of 11/2"X1/8," 3Nos.vertical tube support for head bow with 3" foam mattress covered with rexin (6500 எண்ணிக்கையில்) இரண்டாம் கட்டமாக கொள்முதல் செய்யும் பணி |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 3 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 9,16,56,500.00 |
| 4 | Supplying and fixing of patient steel cot size: Length 72" Breadth 35, Height24", 18 gauge Sheet with frame made of 11/2"X1/8," 3Nos.vertical tube support for head bow with 3" foam mattress covered with rexin (6500 Nos)<br>11950 X 6500 = 7,76,75,000.00 | ரூ. 7,76,75,000.00 |
| 5 | (ஆ) GST 18 % | ரூ. 1,39,81,500.00 |
| | மொத்தம் | ரூ 9,16,56,500.00 |

| | | |
|---|---|---|
| 6 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண். | COVID-19 அரசு மான்ய நிதி (State Disaster Relief Fund) |
| 7 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 9,16,56,500.00 |

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், *TNSCB* மற்றும் *TNHB* குடியிருப்புகளில் தனிமைப்படுத்தும் அறைகளில் Supplying and fixing of patient steel cot size: Length 72” Breadth 35, Height24”, 18 gauge Sheet with frame made of 11/2”X1/8,” 3Nos.vertical tube support for head bow with 3” foam mattress covered with rexin (6500 எண்ணிக்கையில்) கொள்முதல் செய்ய *GST* உட்பட ரூ. 9,16,56,500.00 க்கு (ரூபாய் ஒன்பது கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதியும் ,
2) இவற்றை தேவைக்கேற்ப மூன்று தவணைகளாக கொள்முதல் செய்வதற்கும்,
3) அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020 நாள்.01.04.2020ன்படி மேற்கண்ட கொள்முதல் Sec 16 (a) TNTT Act ன்படி நேரடியாக பணி மேற்கொள்ளவும்
4) ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டு இறுதி செய்யப்பட்ட விலைக்கே இந்த கொள்முதல் பணிக்கு பணி ஆணை வழங்கி உடனடியாக பணியினை மேற்கொள்ளவும்,
5) இந்த கொள்முதல் பணிக்காக 75 சதவீதம் முன்பணம் பெற்று பணி மேற்கொள்ளவும்,
6) மேற்கண்ட முன்பணத்தினை பணிநிறைவுற்ற பின்னர் சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்களால் நேர் செய்யவும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/ 245/ 2020**

**தீர்மான எண்.309/2020** **நாள்:02-05-2020**

**பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை - கொரோனா வைரஸ் நோய் தடுப்பு - முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு கிருமி நாசினி லைசால் (Cresol + soap Solution) *75,000* லிட்டர் நேரடி கொள்முதல் செய்ய அனுமதி .**

உலகம் முழுவதும் பரவிவரும் *(COVID*-19) கொரோனா உயிர்க்கொல்லி வைரஸ் தொற்று தடுப்பு பணி குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியில் அவசர கூட்டம் நடத்தப்பட்டது. அவற்றில் இவ்வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து, தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதிகள் 1988, பிரிவு-*16(a)*ன் கீழ் இயற்கை சீற்றம் மற்றும் பேரிடர் காலங்களில் வரையறுக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறைக்கு விலக்களிப்பட்டுள்ளதன் அடிப்படையில் கொரோனா நோய் தொற்று கண்டறியப்படும் அனைத்து இடங்களிலும் அதிக கவனம் செலுத்தி கூடுதலாக கிருமி நாசினி தெளிக்க 90,000 லிட்டர் கிருமி நாசினி கொள்முதல் செய்து களப்பணியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சியில் பெருமளவில் கொரோனா நோய் தொற்று பரவுதலை தடுக்க தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்க வேண்டியுள்ளதாலும், கிருமி நாசினி கையிருப்பு இல்லாததாலும் மேலும் 75,000 லிட்டர் கொள்முதல் செய்ய கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| Sl. No. | Company Name | Cresol + soap Solution Rate per Litter (Rs.) | GST@18 % | Total mount (Rs) |
|---|---|---|---|---|
| 1. | Harith Garden and Pest Clinic | 152.54 | 27.45 | 180/- |
| 2. | Metabolites Technologies | 165.50 | 29.79 | 195 |
| 3. | Yogna Trading Pvt. Ltd., | 184.50 | 33.21 | 218 |

மேற்படி, சந்தை விலை குறித்து பரிசீலிக்கப்பட்டு திருவாளர். ஹரித் கார்டன் & பெஸ்ட் கிளினிக் அவர்களை அணுகியதில், அன்னார் லைசால் *(Cresol + soap Solution)* கிருமி நாசினி ஒரு லிட்டர் ரூ.180/-க்கு வழங்கியுள்ளதை மேலும் ரூ.179/-க்கு ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, ஒரு லிட்டர் லைசால் ரூ. 151.70/- வீதம் 75,000 லிட்டர் ரூ.1,13,77,500/-க்கு சரக்கு மற்றும் சேவை வரிகள் 18% ரூ.20,47,950/-ஐ சேர்த்து மொத்தம் ரூ.1,34,25,450/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நாநூற்று ஐம்பது மட்டும்) செலவில் திருவாளர். ஹரித் கார்டன் & பெஸ்ட் கிளினிக் அவர்களிடம் கொள்முதல் செய்ய ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதிகள் 1988, பரிவு-*16(a)*ன் கீழ் நேரடி கொள்முதல் செய்யவும்,
2. கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு இரண்டாம் கட்டமாக கிருமி நாசினி 75,000 லிட்டர் நேரடி கொள்முதல் செய்யவும்,
3. குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். ஹரித் கார்டன் & பெஸ்ட் கிளினிக் அவர்களிடம் ஒரு லிட்டர் ரூ.151.70/- வீதம் 75,000 லிட்டர் ரூ.1,13,77,500/- மற்றும் சரக்கு மற்றும் சேவை வரிகள் 18% ரூ.20,47,950/- மொத்தம் ரூ.1,34,25,450/-ற்கான செலவு தொகையை ஏற்கவும்,
4. திருவாளர். ஹரித் கார்டன் & பெஸ்ட் கிளினிக் அவர்களுக்கு கொள்முதல் ஆணை வழங்கவும்,
5. இச்செலவீன தொகை ரூ.1,34,25,450/-ஐ தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்கள் பெயரில் முன்பணமாக பெற்று செலவு தொகையை தீர்வு காணவும்,

**பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/ 245/ 2020**

6. **கொரோனா நோய் தடுப்பு அவசர பணிக்கான நேரடி கொள்முதல் தொகைக்கான பிணை வைப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதில் விலக்களிக்கவும்,**

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

## S.W.M.G.S.C.No.A7/1246/2020

**Resolution No.310 /2020** **Date:02-05-2020**

**Solid Waste Management Department – Spreading of disinfectant – certain Important Places – Public gathering places, Market Places, Bus Stands etc., - Prevention of Corona Virus – Purchase of 500 MT of Bleaching Powder for the use of 15 Zones – For Administrative sanction.**

On Prevention of Spreading of "Corona Virus" in the city, already spraying of disinfectant public gathering places like Market places, Bus stand and other locations have been made by utilizing bleaching powder. On Further, 500 MT of Bleaching Powder is necessary to purchase in order to keep sufficient stock to meet out any eventualities.

The Cost of 500 MT of Bleaching powder is worked out as below:

| | | | |
|---|---|---|---|
| (A) | Cost of Bleaching Powder - per MT | = | Rs. 31,000 |
| (B) | GST @ 18% | = | Rs 5,580 |
| (C). | Cost of Bleaching powder (A) +(B) including taxes | = | Rs. 36,580 |
| (D). | Transporting charges per M.T | = | Rs. 2,000 |
| | **total Cost of Bleaching powder (C) +(D) per M.T** | = | **Rs. 38,580** |
| | Cost of 500 MT of Bleaching Powder<br>(**Rs. 38,580 X 500 M.T = Rs.1,92,90,000 )** | = | **Rs.1,92,90,000** |

Hence,

(1) to accept administrative sanction for an amount of Rs.1,92,90,000/- (Rupees one crore ninety two lakhs ninety thousand only) to purchase of 500MT of Bleaching powder for the use of 15 zones.

(2) to sanction the said amount of Rs.1,92,90,000/- (Rupees one crore ninety two lakhs ninety thousand only) as advance.

(3) to procure the above materials under 16(a) of the Tamil Nadu Transparency in Tender Act' 1998.

(4) to exempt from the payment of Security Deposit and also from the executing agreement, since it is an emergency purchase on prevention of spreading of "COVID 19" in the City.

Sl.No. 1 to 4 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.02.05.2020 is read.

**"Purchase of Bleaching powder, Sl.No. 1 to 4 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0729/2020**

**தீர்மான எண்.311/2020** **நாள்:04-05-2020**

**இயந்திரப் பொறியியல் துறை- "கொரோனா வைரஸ்" தடுப்பு முன்னெச்சரிக்கை பணி - கிருமி நாசினி தெளிக்கும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus)மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, மத்திய அரசும் மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மற்றும் பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வரப்படுகிது..

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு ஏற்ப இயந்திரங்கள் கொள்முதல் செய்ய வேண்டியிருந்ததால் ஆணையர் அவர்களின் 13/03/2020 நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் (சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண் 216/2020 நாள் 16.03.2020)பெறப்பட்டது, தற்போதைய சுகாதார பேரிடர் காலத்தில் கிருமி நாசினி தெளிக்கும் பணிக்காக உபகரணங்களை உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதாலும், மற்றும் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதன் அடிப்படையிலும் அரசு 'இ' மார்க்கெட் விலைக்கும் மற்றும் இவ்வகை உபகரணங்கள் தயாரிப்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட உபகரணங்களை கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி ஆணையர் அவர்களின் 18.03.2020 நாளிட்ட ஆணை பெறப்பட்டு கொள்முதல் பணி ஆணை வழங்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

| Sl. No | File No. | Description | Qty | Amount Rs. |
|---|---|---|---|---|
| 1. | M1/655/2020 | Vehicle Mounted Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model: K-22/10-O (SS) | 39Nos | 2,11,11,675/- |
| 2. | M1/656/2020 | Hand Operated Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model: RPF-10SP | 200Nos. | 1,53,99,800/- |
| 3. | M1/657/2020 | Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer Make: STHIL Model: SR-5600 | 184 Nos. | 47,38,000/- |
| | | Total | 423 Nos. | 4,12,49,475/- |

இந்நிலையில், கொரோனா தொற்று அதிகமாக கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகர பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளிக்கும் பணியை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்ததால்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0729/2020**

மேலே கொள்முதல் செய்யப்பட்டுள்ள உபகரணங்கள் தவிர கீழ்கண்ட உபகரணங்களும் மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி கொள்முதல் செய்யப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

| Sl. No | File No. | Description | Qty | Amount Rs. |
|---|---|---|---|---|
| 1. | M1/680/2020 | Tractor driven Sprayer<br>Make: Shakthiman<br>Model: Rakshak 400 | 15 Nos. | 59,92,492/- |
| 2. | M1/689/2020 | Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer<br>Make: STHIL<br>Model: SR-5600 | 100Nos. | 25,75,000/- |
| | | Total | 115 Nos. | 85,67,492/- |

மேற்கண்ட அட்டவணைகளின்படி "கொரோனா வைரஸ்" தடுப்பு முன்னெச்சரிக்கை பணிக்காக 4 வகையான கிருமி நாசினி தெளிப்பான்கள் 538 எண்ணிக்கையில் ரூ.4,98,16,967/- செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல் படுத்தப்பட்டால் பெருநகர சென்னை மாநகராட்சியின் முக்கிய பணியான தூய்மை பணி உள்ளிட்ட பொது சுகாதார பணியினை மண்டலம்.-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு தூய்மை பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் பணிக்கு வந்து செல்ல ஏதுவாக மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து 100 பேருந்துகள் 50 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் தோராயமாக ரூ.6,93,25,000/- (ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) செலவீனத்தில் அமர்த்த மன்றத்தின் பின்னேற்பு ஆணையினை எதிர் நோக்கி ஆணையர் அவர்களின் 23.03.2020 நாளிட்ட ஆணை பெற்று மாநகர போக்குவரத்து கழகத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டதிற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது. தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல் -16(a)ன் படி பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதன் அடிப்படையில் தமிழக அரசு பொது நிறுவனமான மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று பேருந்துகளை வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொண்டு வருவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

இந்நிலையில் அரசு கடித Letter No 74/JS (MA)/Finance(Salaries)/ 2020, Dated:01.04.2020ல் கொரோனா பணிக்கென மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ன் படி ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெறப்பட்ட பின் நேர் செய்யலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு கீழ்கண்ட இயந்திரங்கள் உபகரணங்கள் கொள்முதல் செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0729/ 2020**

| Sl. No | File No. | Description | Qty | Amount Rs. | Name of Supplier |
|---|---|---|---|---|---|
| 1. | M1/655/2020 | Vehicle Mounted Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model: K-22/10-O (SS) | 39 Nos | 2,11,11,675/- | M/s Dream big Networks Pvt Ltd (Authorized dealer for M/s Royal Trade Links, Manufacturer of Puls fog Machines) |
| 2. | M1/656/2020 | Hand Operated Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model: RPF-10SP | 200 Nos. | 1,53,99,800/- | M/s Dream big Networks Pvt Ltd (Authorized dealer for M/s Royal Trade Links, Manufacturer of Puls fog Machines) |
| 3. | M1/657/2020 | Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer Make: STHIL Model: SR-5600 | 184 Nos. | 47,38,000/- | M/s. OMM Enterprises (Authorized dealer for STIHL ) |
| | | Total | 423 Nos. | 4,12,49,475/- | |

2. 15 எண்ணிக்கையில் டிராக்டரில் பொருத்தக் கூடிய கிருமி நாசினி தெளிப்பான்கள் *(Tractor Mounted Sprayers)* மற்றும் மேலும் 100 எண்ணிக்கையில் *Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer*-கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் திருவாளர்கள் *Thamirabharani Agri IMP* திருவாளர்கள். ஓம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் மேற்கொண்டதற்கு அனுமதி வேண்டியும்,
3. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஊரடங்கு உத்தரவு காலத்தில் தூய்மை பணி உள்ளிட்ட பொது சுகாதார பணியினை மண்டலம்.-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு தூய்மை பணியாளர்கள், மருத்துவ சேவை பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் பணிக்கு வந்து செல்ல ஏதுவாக தமிழக அரசின் பொது நிறுவனமான மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து 100 பேருந்துகள் 50 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் (ஒரு பேருந்து நாள் ஒன்றிற்கு ரூ.13,865/- வீதம்) தோராயமாக ரூ.6,93,25,000/- (ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) செலவீனத்தில் அமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும் மற்றும் தமிழக அரசின் பொது நிறுவனமான மாநகர போக்குவரத்து கழகத்திற்கு 100 பேருந்துகள் 50 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்தி மேற்கொள்ளப்பட்டு வரும் பணிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
4. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதன் அடிப்படையில் அரசு 'இ' மார்க்கெட் விலையிலும் மற்றும் தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்றும் கீழ்கண்ட கொள்முதல் மற்றும் பேருந்து வாடகைக்கு அமர்த்தும் பணி மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் ,

| Sl.No. | File No. | Description | Qty | Amount Rs. | Name of Supplier |
|---|---|---|---|---|---|
| 1 | M1/655/2020 | Vehicle Mounted Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model:\ K-22/10-O (SS | 39 Nos | 2,11,11,675/- | M/s Dream big Networks Pvt Ltd (Authorized dealer for M/s Royal Trade Links, Manufacturer of Puls fog Machines) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | M1/656/2020 | Hand Operated Petrol Engine Driven Puls Fogging Machine Make: Puls Fog Model: RPF-10SP | 200 Nos. | 1,53,99,800/- | M/s Dream big Networks Pvt Ltd (Authorized dealer for M/s Royal Trade Links, Manufacturer of Puls fog Machines) |
| 3. | M1/657/2020 | Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer Make: STHIL Model: SR-5600 | 184 Nos | 47,38,000/- | M/s. OMM Enterprises (Authorized dealer for STIHL ) |
| 4. | M1/680/2020 | Tractor driven Sprayer Make: Shakthiman Model: Rakshak 400 | 15 Nos. | 59,92,492/- | M/s. Thamirabarani Agri IMP (Authorised dealer for Shakthiman) |
| 5. | M1/689/2020 | Petrol Engine Driven Mist Blower along with Hand operated Sprayer Make: STHIL Model: SR-5600 | 100 Nos. | 25,75,000/- | M/s. OMM Enterprises (Authorized dealer for STIHL ) |
| 6 | M1/698/2020 | 6,93,25,000/- | 100 Nos. | 6,93,25,000 | M/s Metropolitan Transport Corporation (Chennai Ltd) (தமிழ்நாடு அரசு நிறுவனம்) |
| | | Total | 538 Nos | 11,91,41,967/- | |

5. இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,. மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெறப்பட்ட பின் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 23.04.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

ம.அ.1.பொ.து.ந.க.எண்.எச்1/ 2118/ 2020

**தீர்மான எண்.312/2020** **நாள்:04-05-2020**

**மண்டலம்-1 (திருவொற்றியூர்) கோட்டம்-1 முதல் 14வரை பகுதிகளில் கொரோனா வைரஸ்- தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 600 தற்காலிக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரேனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers), மாதம் ஊதியம் ரூ.15,000/- வீதத்தில் 3 மாதத்திற்கு பணியமர்த்தி கொள்ள ஆணையர் அவர்களின் 31/03/2020 அன்று காணொலி கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-1 கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு-1 முதல் 14 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் இதுபோன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளின் பொருளாதார சுய விபரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 779 பணியாளர்களை (Survey Workers) 03.04,2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 600 பணியாளர்கள் 3 மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | வார்டு பண் | ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் DBC | | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | NULM | நிரந்தரம் | | |
| 1 | 1 | 11 | 2 | 48 | 61 |
| 2 | 2 | 9 | 2 | 36 | 47 |
| 3 | 3 | 20 | 3 | 96 | 119 |
| 4 | 4 | 10 | 2 | 36 | 48 |
| 5 | 5 | 10 | 2 | 42 | 54 |
| 6 | 6 | 13 | 2 | 54 | 69 |
| 7 | 7 | 12 | 4 | 54 | 70 |
| 8 | 8 | 9 | 1 | 36 | 46 |
| 9 | 9 | 9 | 2 | 30 | 41 |
| 10 | 10 | 10 | 2 | 36 | 48 |
| 11 | 11 | 10 | 1 | 36 | 47 |
| 12 | 12 | 10 | 1 | 36 | 47 |
| 13 | 13 | 9 | 2 | 30 | 41 |
| 14 | 14 | 10 | 1 | 30 | 41 |
| மொத்தம் | | **152** | **27** | 600 | 779 |

மேற்கண்ட 779 பணியாளர்களில் 27 நிரந்தர பணியாளர்கள் ஆகும். 152 (NULM) தற்காலிக பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 31.10.2019 ஆணையின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 600 தற்காலிக பணியார்களுக்கு மட்டுமே மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-1ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு-1 முதல் 14 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் இதுபோன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளின் பொருளாதார சுய விபரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 600 பணியாளர்களை (Survey Workers ) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்திற்கு அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட 600 பணியாளர்களுக்கு (Survey Workers ) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.15,000 வீதம் 600 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 600 x 15,000 x 3 = 2,70,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபது லட்சம் மட்டும்) வழங்கவும்,.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தற்காலிக பணியாளர் நியமனம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**ம.அ.15.பொ.சு.து. ந.க. எண் எச்1/ 1942 /2020**

**தீர்மான எண்.313/2020** **நாள்:04-05-2020**

**மண்டலம்-15 - கொரோனா வைரஸ்- தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 668 தற்காலிக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

ஆணையர் அவர்களின் 31.03.2020 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Worker) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-15ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-192 முதல் 200 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 744 பணியாளர்களை (Survey Worker) 03.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 668 பணியாளர்கள் மூன்று மாத கலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வ, எண் | கோட்டம் | ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் | | | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | DBC | | UHN | | |
| | | NULM | நிரந்தரம் | நிரந்தரம் | | |
| 1 | 192 | 12 | 1 | 1 | 60 | 74 |
| 2 | 193 | 5 | 2 | 0 | 73 | 80 |
| 3 | 194 | 4 | 1 | 0 | 39 | 44 |
| 4 | 195 | 6 | 0 | 0 | 188 | 194 |
| 5 | 196 | 10 | 3 | 0 | 69 | 82 |
| 6 | 197 | 8 | 0 | 0 | 94 | 102 |
| 7 | 198 | 9 | 3 | 0 | 63 | 75 |
| 8 | 199 | 2 | 1 | 0 | 11 | 14 |
| 9 | 200 | 4 | 0 | 4 | 71 | 79 |
| | **மொத்தம்** | **60** | **11** | **5** | **668** | **744** |

மேற்கண்ட 744 பணியாளர்களில் -16 நிரந்தர பணியாளர்கள் ஆகும். 60 (NULM) தற்காலிக பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 24.09.2019 மற்றும் 30.09.2019 நாளிட்ட ஆணையின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 668 தற்காலிக பணியாளர்களுக்கு மட்டுமே மூன்று மாத கலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1 மண்டலம்-15ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-192 முதல் 200 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கண்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய

விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 668 பணியாளர்களை (Survey Worker) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2 மேற்கண்ட 668 பணியாளர்களுக்கு (Survey Worker) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.15000/- வீதம், 668 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 668X15000X3= ரூ.3,00,60,000 (ரூபாய். மூன்று கோடியே அறுபதாயிரம் மட்டும்) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ தற்காலிக பணியாளர் பணி நியமனம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.2/சு.து.ந.க.எண்.எச்1/ 1129 / 2020**

**தீர்மான எண்.314/2020** **நாள்:04-05-2020**

**மண்டலம்-2 - சுகாதாரத் துறை - கோட்டம் -15 முதல் 21 வரை கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக 215 நபர்களை தற்காலிக பணியாளர்களாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.**

ஆணையர் அவர்களின் 02/04/2020 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவில், மண்டலடம்-2, சுகாதாரத் துறை, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 25540 வீடுகளை குறுவட்டங்களுக்கு 250 தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமிக்க கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் குறித்து தெரிவித்து கொள்வது யாதெனில், மண்டலம் 2, சுகாதாரத் துறை, மணலி ( கோட்டம் 15 முதல் 21 வரை ) 7 கோட்டங்களில் 25540 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 250 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கெடுக்கும் பணிகளுக்கு தற்போது கூடுதலாக 215 நபர்களை மூன்று மாதங்களுக்கு தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15,000/- வீதம் 215 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.32,25,000/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு ரூ.96,75,000/- (எழுத்தால் ரூபாய் தொண்ணூற்றி ஆறு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண். | கோட்டம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செக்டார் எண்ணிக்கை | ஏற்கனவே உள்ள பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் | கோட்டம் வாரியாக 5 % (BUFFER) பணியாளர்கள் | மொத்த புதிய பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் ரூ. | மூன்று மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 3320 | 32 | 4 | 28 | 0 | 28 | 420000 | 1260000 |
| 2 | 16 | 4471 | 38 | 7 | 31 | 1 | 31 | 465000 | 1395000 |
| 3 | 17 | 2124 | 21 | 5 | 16 | 0 | 16 | 240000 | 720000 |
| 4 | 18 | 2153 | 26 | 4 | 22 | 1 | 22 | 330000 | 990000 |
| 5 | 19 | 8868 | 97 | 13 | 84 | 1 | 84 | 1260000 | 3780000 |
| 6 | 20 | 2443 | 18 | 4 | 14 | 1 | 16 | 240000 | 720000 |
| 7 | 21 | 2161 | 18 | 2 | 16 | 0 | 18 | 270000 | 810000 |
| **மொத்தம்** | | **25540** | **250** | **39** | **211** | **4** | **215** | **32,25,000** | 96,75,000/- |

எனவே, மண்டலடம் 2, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள குறுவட்டப் பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 25540 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரானா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 215 நபர்களை தற்காலிக பணியாளர்கள் நியமிக்க கீழ்கண்டுள்ள இனங்களுக்கு ஆணையர் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

(அ) மண்டலம்2. கோட்டம் 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும். நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் இ,தர மூலங்கள் மூலம் 215 தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும்,

(ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15,000/- வீதம் 215 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 32,25,000/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு = ரூ.96,75,000/- (எழுத்தால் ரூபாய் தொண்ணூற்றி ஆறு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதியும்,.

(இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03-லிருந்து செலவு செய்யவும்,

மேற்கண்ட “அ” முதல் “இ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 01.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“215 தற்காலிக பணியாளர் நியமனம், “அ” முதல் “இ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**ம.அ.11.பொ.து.சு.தந.க.எண்.எச்3/ 320/ 2020**

**தீர்மான எண்.315/2020** **நாள்:04-05-2020**

**மண்டலம்-11 - பொது சுகாதாரத்துறை - கோட்டம்-143 முதல் 155 வரை - கொசு ஒழிப்பு பணியினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் பணியமர்த்தப்பட்ட (தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் 03.05.2020 உடன் முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு - National Urban Livelihood Mission (NULM) (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மூலம் பணியமர்த்த நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வளசரவாக்கம் பகுதியானது 143 முதல் 155 வரையிலான 13 வார்டுகளை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3121 சாலைகள் / தெருக்கள், 96,251 வீடுகளும், சுமார் 4.33 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும்.

மண்டலம்-11-ல், கூவம் ஆறு, புவனேஷ்வரி கால்வாய், நொளம்பூர் கால்வாய், மற்றும் நந்தம்பாக்கம் கால்வாய் 7 கி.மீ கொண்ட நீர்வழிப்பாதைகள் செல்கின்றன. இவற்றில் வாரந்தோறும் கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள 13 பணியாளர்களும், மேலும் 132.4 கி.மீ. நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாயில் 18 பணியாளர்களும், சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணியினை மேற்கொள்ள 16 பணியாளர்களும், வீடுகளில் கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணியினை மேற்கொள்ள 17 பணியாளர்களும் தேவைப்படுகின்றனர். அத்துடன் தற்போது 5 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

ஆணையாளர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 26.04.2019 நாளிட்ட அனுமதியின்படி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.249./2019, நாள். 02.05.2019ன் அடிப்படையிலும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் பணியமர்த்தப்பட்ட தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் மண்டலம்-11க்கு தேவையான ஒரு வருட காலத்திற்கு 181 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் நாளொன்றிக்கு ரூ.379/- வீதம் ஊதியம் நிர்ணயம் செய்து ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஆணை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படைடியில் மண்டலம்-11ல், 181 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் நாளொன்றிக்கு ரூ.362/- வீதம் NULM - தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் 04.05.2019 முதல் 1 வருட காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த பணிக்காலம் வரும் 03.05.,2020 உடன் முடிவடைய உள்ளது.

மேற்பார்வை பொறியாளர், திடக்கழிவு மேலாண்மைத்துறை அவர்களின் சுற்றறிக்கையின்படி தற்காலிக மலேரியா பணியாளர்களுக்கு ஊதியம் ரூ.362/- லிருந்து ரூ.379/- ஆக உயர்த்தி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, அந்தந்த மண்டலத்திலேயே National Urban Livelihood Mission (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மூலம் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

இதன்படி, மண்டலம்-11ல் பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட வார்டுகளான 143 முதல் 155 வரை தேவையான பணியாளர்களை தற்போது பணிபுரியும் தற்காலிக ஒப்பந்த பணியாளர்கள் 181 பணிபுரிகின்றனர்.

மேலும் மண்டலம்-11 விரிவாக்கம் செய்யப்பட்ட புதிய மண்டலம் என்பதாலும் கொரோனா நோய் தடுப்பு பணியின்போது எடுக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை மற்றும் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் புதிய குடியிருப்பு பகுதிகள் அதிகமான காரணத்தால் கூடுதலாக 56 பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் 237 பணியாளர்கள் National Urban Livelihood Mission (NULM) (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மூலம் பணியமர்த்த வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ம.அ.11.பொ.து.சு.தந.க.எண்.எச்3/ 320/ 2020**

| வ.எண். | வார்டு எண் | சிற வட்டத்திற்கு தேவையான பணியாளர்கள் | மழை நீர் வடி கால் கால்வாய்க்குதேவையன | கால் வாய்,கூவம், ஆறு மருந்து தெளிக்கும் பணிக்கு தேவையன பணியாளர்கள் | வீடுகளில் மருந்து தெளிக்கும் பணிக்கு தேவையன பணியாளர்கள் | புகை பரப்பும் பணிக்கு தேவையன பணியாளர்கள் | அலுவலக பணியாளர்கள் | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | நீண்ட நாள் விடுப்பு | NULM மூலம் பணியமர்த்த பணியாளர்களின் எண்ணிக்கை | ரூ379/-ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு X 31நாட்கள் X Short Tender 232 நபர்கள் X2 (1 வருடத்திற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 143 | 11 | 2 | 3 | 1 | 1 | 0 | 18 | 3 | 0 | 18 | 2490030 |
| 2 | 144 | 10 | 1 | 4 | 1 | 1 | 0 | 17 | 0 | 0 | 17 | 2351695 |
| 3 | 145 | 12 | 1 | 2 | 1 | 1 | 3 | 20 | 0 | 0 | 20 | 2766700 |
| 4 | 146 | 15 | 1 | 3 | 1 | 1 | 0 | 21 | 1 | 0 | 21 | 2905035 |
| 5 | 147 | 16 | 2 | 0 | 2 | 2 | 0 | 22 | 3 | 0 | 22 | 3043370 |
| 6 | 148 | 15 | 2 | 1 | 2 | 1 | 1 | 22 | 1 | 0 | 22 | 3043370 |
| 7 | 149 | 9 | 3 | 0 | 2 | 1 | 3 | 18 | 1 | 0 | 18 | 2490030 |
| 8 | 150 | 13 | 2 | 0 | 2 | 1 | 3 | 21 | 0 | 0 | 21 | 2905035 |
| 9 | 151 | 8 | 2 | 0 | 1 | 1 | 0 | 12 | 0 | 0 | 12 | 1660020 |
| 10 | 152 | 11 | 1 | 0 | 1 | 1 | 2 | 16 | 0 | 0 | 16 | 2213360 |
| 11 | 153 | 10 | 2 | 1 | 2 | 2 | 0 | 17 | 1 | 0 | 17 | 2351695 |
| 12 | 154 | 9 | 1 | 0 | 2 | 2 | 0 | 14 | 1 | 0 | 14 | 1936690 |
| 13 | 155 | 11 | 2 | 2 | 2 | 2 | | 19 | 0 | 0 | 19 | 2628365 |
| புகைப் பரப்பும் பணி | | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 |
| | | 150 | 22 | 16 | 20 | 17 | 12 | 237 | 11 | 0 | 237 | 32785395 |

மண்டலம்-11ல் பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட வார்டுகளான 143 முதல் 155 வரை தேவையான கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிக்கு 237 தற்காலிக மலேரியா பணியாளர்களை National Urban Livelihood Mission (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மூலம் மலேரியா பணியாளர்களை ஈடுபடுத்த,

| | |
|---|---|
| அ | மண்டலம்-11, பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட வார்டுகளான 143 முதல் 155 வரையிலான 13 வார்டுகளிலும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணி மற்றும் நாய்பிடிக்கும் பணிக்காக தற்காலிக மலேரியா பணியாளர்களை நாளொன்றிக்கு ரூ.379/- வீதம் 1 வருட காலத்திற்கு 237 தற்காலிக மலேரியா பணியாளர்களை ஓராண்டுக்கு National Urban Livelihood Mission (NULM) (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மூலம் 04.05.2020 முதல் 03.05.2021 வரை (பன்னிரெண்டு மாதங்கள்) பணியில் ஈடுபடுத்தவும் |
| ஆ | இப்பணிக்கான செலவினம் ரூ.3,27,85,395/- (ரூபாய் மூன்று கோடியே இருபத்தேழு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் ஒப்பத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தாரர் தெரிவிக்கும் சேவை கட்டணம் சேர்த்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும் |
| இ | இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தமற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பின் 2020-2021 நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும். |
| ஈ | இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தரமற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பில் பட்டியயை தீர்வு செய்யவும் |
| உ | மத்திய அரசின் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்களாக இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்து மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும். |

| | |
|---|---|
| ஊ | **மேலும், ஒப்பம் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் தற்காலிக தினக்கூலி மலேரியா பணியாளர்களுக்கு நலப்பொருட்களான சீருடை, செப்பல், கிளவுஸ், மாஸ்க், அடையாள அட்டை வழங்கவும்** |

மேற்கண்ட “அ” முதல் “ஊ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**““அ” முதல் “ஊ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.13.ந.க.எண்.து.பி. சி/ 0595 / 2020**

**தீர்மான எண்.316 / 2020** **நாள்:04-05-2020**

**மண்டலம் -13 – கொரனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 1241 தற்காலிகமாக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-13ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 1472 பணியாளர்களை (Survey Worker) 04.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 1241 பணியாளர்கள் மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| S.No | Div | Sector workers | Animators | Urban Health Nurses/ANM | Anganwadi | Mahila Arokya Committe | SHG | | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 170 | 12 | 1 | 0 | 0 | 0 | 35 | 48 | 96 |
| 2 | 171 | 14 | 1 | 5 | 1 | 0 | 34 | 64 | 119 |
| 3 | 172 | 13 | 1 | 3 | 1 | 10 | 34 | 27 | 89 |
| 4 | 173 | 15 | 1 | 0 | 4 | 0 | 74 | 35 | 129 |
| 5 | 174 | 15 | 1 | 0 | 0 | 0 | 28 | 60 | 104 |
| 6 | 175 | 16 | 1 | 0 | 0 | 0 | 40 | 14 | 71 |
| 7 | 176 | 13 | 0 | 2 | 0 | 7 | 24 | 58 | 104 |
| 8 | 177 | 30 | 1 | 4 | 0 | 0 | 123 | 76 | 234 |
| 9 | 178 | 9 | 1 | 2 | 0 | 0 | 32 | 47 | 91 |
| 10 | 179 | 11 | 1 | 5 | 0 | 0 | 43 | 50 | 110 |
| 11 | 180 | 16 | 1 | 0 | 0 | 0 | 103 | 0 | 120 |
| 12 | 181 | 13 | 1 | 0 | 0 | 0 | 50 | 46 | 110 |
| 13 | 182 | 13 | 1 | 2 | 0 | 0 | 46 | 33 | 95 |
| **Total** | | **190** | **12** | **23** | **6** | **17** | **666** | **558** | **1472** |

மேற்கண்ட 1472 பணியாளர்களில் மலேரியா செக்டார் பணியாளர்கள் (NULM), நகர சுகாதார செவிலியர்கள், அங்கான்வாடி சார்ந்த பணியாளர்கள் மற்றும் அனிமேட்டர்ஸ் மொத்தம் 231 நபர்கள் நீங்கலாக மீதமுள்ள மகிளா ஆரோக்கிய சமிதி (MAS) உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுகள் (SHG) மற்றும் தனியார் தன்னார்வலர்கள் மொத்தம் 1241 பணியாளர்களுக்கு 90 நாட்களுக்கு ஒரு நாளுக்கு ரூ.500/- (ஐநூறு மட்டும்) வீதம், மாதம் ரூ.15,000/- (பதினைந்தாயிரம் மட்டும்) வீதம் மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**ம.அ.13.ந.க.எண்.து.பி. சி/0595/2020**

எனவே,

1. மண்டலம்-13ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 1241 பணியாளர்களை (Survey Worker)மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 1241 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிக்கு ரூ. 15000/- வீதம், 1241 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 1241 x 15000 x 3 = ரூ.5,58,45,000/- (ரூபாய். ஐந்து கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும் நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தற்காலிக பணியாளர் பணி நியமனம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.8.ந.க.எண்.து.பி. சி3/ 1973 / 2020**

**தீர்மான எண்.317 / 2020** **நாள்:05-05-2020**

**மண்டலம் -8 - கொரனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 695 தற்காலிகமாக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

31.03.2020 அன்று நடைபெற்ற ஆணையர் அவர்களின் காணொளி கலந்தாய்வு கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-8ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 94 முதல் 108 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 840 பணியாளர்களை (Survey Worker) 03.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 695 பணியாளர்கள் மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வார்டு எண் | ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் | | | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | DBC | | UHN | | |
| | | NULM | நிரந்தரம் | நிரந்தரம் | | |
| 1 | 94 | 12 | 1 | | 79 | 92 |
| 2 | 95 | 11 | 2 | 4 | 66 | 83 |
| 3 | 96 | 5 | 3 | | 35 | 43 |
| 4 | 97 | 4 | 2 | | 46 | 52 |
| 5 | 98 | 2 | 1 | | 30 | 33 |
| 6 | 99 | 10 | 0 | | 64 | 74 |
| 7 | 100 | 5 | 4 | 7 | 41 | 57 |
| 8 | 101 | 4 | 5 | | 42 | 51 |
| 9 | 102 | 7 | 1 | | 48 | 56 |
| 10 | 103 | 7 | 1 | | 39 | 47 |
| 11 | 104 | 3 | 2 | 7 | 38 | 50 |
| 12 | 105 | 7 | 1 | 9 | 54 | 71 |
| 13 | 106 | 3 | 1 | | 24 | 28 |
| 14 | 107 | 4 | 1 | | 36 | 41 |
| 15 | 108 | 6 | 3 | | 53 | 62 |
| | | **90** | **28** | **27** | **695** | **840** |

மேற்கண்ட 840 பணியாளர்களில் 55 நிரந்தர பணியாளர்கள் ஆகும். 90 (NULM) தற்காலிக பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 24.09.2019 மற்றும் 30.09.2019 நாளிட்ட ஆணையின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 695 தற்காலிக பணியாளர்களுக்கு மட்டுமே மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-8ல் கொரானா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 94 முதல் 108 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 695 பணியாளர்களை (Survey Worker) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட 695 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிக்கு ரூ. 15000/- வீதம், 695 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 695 x 15000 x 3 = ரூ.3,12,75,000/- (ரூபாய் மூன்று கோடியே பன்னிரண்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"695 தற்காலிக பணியாளர் நியமனம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**தி.க.மே.ந.க.எண்.அ7/ 1171/ 2020**

**தீர்மான எண்.318 / 2020** **நாள்:05-05-2020**

**திடக்கழிவு மேலாண்மை துறை - கொரனா நோய் தடுப்பு பணிக்காக - நிரந்திர மற்றும் தற்காலிக தூய்மை பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு உணவு வழங்க முன்பணம் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் பெயரில் காசோலையாக பெற்று வழங்கப்பட்டமைக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகரில் கொரனா நோய் தடுப்பு பணிக்காக, மண்டலம் 1 முதல் 15 வரை அனைத்து நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் எலக்ட்ரிசியன்ஸ் பணியாற்றி வருகின்றனர். ஊரடங்கு காரணமாக இப்பணியாளர்களுக்கு நேரத்தில் உணவு கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இப்பணியாளர்களுக்கு காலை மற்றும் மதியம் இரண்டு வேலை உணவு வழங்கப்பட வேண்டும்.

ஆணையர் அவர்களின் 28.03.2020 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஓட்டுனர்கள் அனைவருக்கும் 15 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.3,03,20,000/- முன்பணமாக பெற்று வழங்கப்பட்டது.

மத்திய அரசின் உத்திரவின்படி 15.04.2020 முதல் 03.05.2020 வரையிலான ஊரடங்கு கால நீட்டிப்பு உத்திரவு அறிவிக்கப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களான நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுனர்கள், எலக்ட்ரிசியன்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் களஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு காலை மற்றும் மாலை இரண்டு வேளை உணவு வழங்கப்பட மண்டலம் 3 முதல் 15 வரையில் பணிபுரியும் பணியாளர்கள்அனைவருக்கும் ஊரடங்கு கால நீட்டிப்பு நாட்களான 19 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக (மண்டலம் 1 மற்றும் 2 ஐ தவிர்த்து) ரூ.5,77,57,000/- முன்பணமாக பெற்று வழங்கப்பட்டது.

மேலும், மத்திய அரசின் உத்திரவின்படி 04.05.2020 முதல் 17.05.2020 வரையிலான ஊரடங்கு கால நீட்டிப்பு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுனர்கள் எலக்ட்ரிசியன்கள் மற்றும் வீடுகள்தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் அனைவருக்கும் ஊரடங்கு காலம் முடிந்தபின்பும் பணியாற்றலாம் என்பதால் இந்த மாதம் அதாவது 31.05.2020 வரை 28 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.9,23,82,000/- முன்பணமாக பெறுவது அவசியமாகிறது.

எனவே,

(1) மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுனர்கள் எலக்ட்ரிசியன்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் அனைவருக்கும் ஊரடங்கு காலமான 15 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக 28.03.2020 அன்று முன்பணமாக பெறப்பட்ட ரூ.3,03,20,000/-, மற்றும் 19 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக (மண்டலம் 1 மற்றும் 2 ஐ தவிர்த்து) 17.04.2020 அன்று முன்பணமாக பெறப்பட்ட ரூ.5,77,57,000/- ற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,

(2) மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் எலக்ட்ரிசியன்ஸ் ஆகியோர்களுக்கு ஊரடங்கு காலம் முடிந்த பின்பும் பணியாற்றலாம் என்பதால் இந்த மாதம் அதாவது 31.05.2020 வரை 28 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.9,23,82,000/- முன்பணமாக பெற அனுமதியும்,

**திக.மே.ந.க.எண்.அ7/ 1171/ 2020**

(3) மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 28 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு அந்தந்த மண்டலங்களுக்கு குறிப்பிட்டுள்ள தொகையினை பிரித்து வழங்குவதற்கும்,

(4) மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பிரித்து அளிக்கப்பட்ட முன்பணத்தொகைக்கான பட்டிகள் மண்டலங்களின் மூலம் பெறப்பட்டவும் முன்பணத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் பின்னர் நேர்செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.7நக.எண்.எச்2 / 2450 / 2019**

**தீர்மான எண்.319 / 2020** **நாள்:05-05-2020**

**மண்டலம் - 7 அம்பத்தூர் கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் சுகாதார பணிக்கான தொழிலாளர்களை - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் குழக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்த - 07.05.2019 முதல் ஓராண்டிற்கு அனுமதிக்கப்பட்டது- மேலும் 07.05.2020 முதல் ஓராண்டிற்கு பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7 அம்பத்தூர் கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழு மற்றும் கொசு மருந்து தெளிக்கப்பட்டு, கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைகால் மற்றும் மூளை காய்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளவும், மேற்படி மண்டலம்-7ல் நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது. இந்த ஒப்பந்த பணி 03.05.2019 அன்று முடிந்த நிலையில் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.250/2019, நாள்.06.05.2019 மற்றும் ஆணையர் அவர்களின் 04.05.2019 நாளிட்ட குறிப்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல் முறை ஆணை எண் C2/7393/2018 உறுதி செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் தினக்கூலி ரூ.362/- என்ற அடிப்படையில் மதிப்பீடு கணக்கிடப்பட்டதன் பேரில் ஒரு வருடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும் ஆணையர் அவர்களின் 29.09.2019 நாளிட்ட குறிப்பில் சென்னை மாவ.ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வ.எண்43 தினக்கூலி ரூ.362/-லிருந்து ரூ.379/. என உயர்த்தி வழங்கியதை 07.05.2019 முதல் ஓராண்டிற்கு செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 07.05.2019 முதல் 06.05.2020 வரை ஓராண்டுக்காலம் முடிவடைந்த நிலையில் 07.05.2020 முதல் ஒர் ஆண்டிற்கு கீழ்கண்ட இனங்கள் மீது ஆணையர் அவர்களின் மேலான ஒப்பம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | ஒப்பந்தம் முடிவுறும் காலம் | தினக்கூலி | மொத்த நாட்கள் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 220 | 07,05.2020 | ரூ.379/- | 365 | 3,04,33,700/- |

எனவே,

1. சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.250/2019, நாள்.06.05.2019ன்படி மண்டலம்-7 க்கு அனுமதி அளிக்கப்பட 220 பணியாளர்கள் மண்டலம்-7க்கு சுகாதாரத்துறைக்கு (தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM) ஓராண்டுக்கு பணியமர்த்தவும்,
2. தொழிலாளர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.379/- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. மண்டல அலுவலர்-7 அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர் / சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும்,

<u>ம.அ.7நக.எண்.எச்2 / 2450 / 2019</u>

**4.** மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிக்காட்டுதல்களின் படி மேற்சொன்ன 220 பணியாளர்கள் NULM மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**ம.அ.7நக.எண்.எச்2/1000/2020**

**தீர்மான எண்.320/2020** **நாள்:05-05-2020**

**மண்டலம்-7 - வார்டு-79 முதல் 93 வரை- கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை - கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதி மற்றும் அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலம் குறித்த காய்ச்சல், இருமல் மற்றும் சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து பதிவு மேற்கொள்ளும் பணி -735 எண்ணிக்கையிலான பணியாளர்களை 02.04.2020 முதல் மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

ஆணையர் அவர்களின் 01.04.2020 அன்று நடைபெற்ற காணொலி காட்சி மறு ஆய்வு கூட்டத்தில் வழங்கிய ஆலோசனையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, வார்டு- 79 முதல் 93 வரையிலான பகுதிகளில் கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த காய்ச்சல், இருமல் மற்றும் சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும், தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெறும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, கொரானா நோய் மேலும் பரவாமல் தடுக்க மக்களின் உடல் நலன் குறித்த ஆய்வின் தகவல்களை கண்டறியவும், இணையதளம் மூலம் பதிவேற்றம் மேற்கொள்ளவும் மண்டலம்-7ல் உள்ள வீடுகளின் தொகுப்பின் அடிப்படையில் 735 எண்ணிக்கையிலான பணியாளர்களை பணியமர்த்தி அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை விரைந்து முடிக்க கீழ்கண்ட இனங்களுக்கு ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-7,வார்டு- 79 முதல் 93 வரையிலான பகுதிகளில் கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும், தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெறும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும் 735 எண்ணிக்கையிலான பணியாளர்களை 02.04.2020 முதல் தற்காலிகமாக 3 மாதங்களுக்கு பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு ஆணையும்,.
2. மேற்கண்ட பணியர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15000/-வீதம் 735 எண்ணிக்கையிலான பணியாளர்களை 3 மாதங்களுக்கு அமர்த்தி கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.3,30,75,000/-க்கு(ரூ.735x15000x3 மாதங்கள்) நிர்வாக அனுமதியும்,
3. மேற்கண்ட செலவினத்திற்கு கொரனா தடுப்பு பணிகளுக்கான நிதியிலிருந்து முன்பணம் பெற்று பணி மேற்கொள்ள அனுமதியும்
4. கோட்டம் 79 முதல் 93 வரை 44 குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.14ந.க.எண்.எச்1/ 3013 / 2020**

**தீர்மான எண்.321 / 2020** **நாள்:05-05-2020**

**மண்டலம் -14ல் - கொரனா வைரஸ் - தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 574 தற்காலிகமாக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள ஆணையர் அவர்களின் 31.03.2020 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-14ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 168,169,183 முதல் 191 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 574 பணியாளர்களை (Survey Worker) 03.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 419 பணியாளர்கள் மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வார்டு எண் | ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் | | | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | **DBC NULM** | | **UHN** நிரந்தரம் | | |
| | | **DBC** | **CI Staff** | | | |
| 1 | 168 | 6 | 11 | 0 | 8 | 25 |
| 2 | 169 | 3 | 18 | 3 | 26 | 50 |
| 3 | 183 | 4 | 1 | 0 | 40 | 45 |
| 4 | 184 | 10 | 2 | 3 | 76 | 91 |
| 5 | 185 | 0 | 6 | 1 | 43 | 50 |
| 6 | 186 | 0 | 4 | 0 | 37 | 41 |
| 7 | 187 | 3 | 0 | 5 | 11 | 19 |
| 8 | 188 | 13 | 26 | 0 | 40 | 79 |
| 9 | 189 | 4 | 6 | 2 | 41 | 53 |
| 10 | 190 | 6 | 9 | 0 | 36 | 51 |
| 11 | 191 | 3 | 6 | 0 | 61 | 70 |
| | | **52** | **89** | **14** | **419** | **574** |

மேற்கண்ட 574 பணியாளர்களில் 14 நிரந்தர பணியாளர்கள் ஆகும். 141 (NULM) தற்காலிக பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 24.04.2019 மற்றும் 19.03.2020 நாளிட்ட ஆணையின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 419 தற்காலிக பணியாளர்களுக்கு மட்டுமே மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-14ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 168,169,183 முதல் 191 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 419 பணியாளர்களை (Survey Worker) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட 419 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிக்கு ரூ. 15000/- வீதம், 419 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 419 x 15000 x 3 = ரூ.1,88,55,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து எட்டு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**<u>ம.அ11.பொ.சு.து. ந.க. எண் எச்2/ 336 /2020</u>**

**தீர்மான எண்.322 / 2020** **நாள்:05-05-2020**

**<u>மண்டலம் -11ல் - கொரனா வைரஸ் - தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 671 தற்காலிகமாக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள ஆணையர் அவர்களின் 31.03.2020 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 671 பணியாளர்களை (Survey Worker) 03.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு அவசர / அவசியம் கருதி நியமிக்கப்பட்டது. அதில் 671 பணியாளர்கள் மூன்று மாத காலத்திற்கு மட்டும் மண்டலம்-11க்கு தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| மண்டலம் | பகுதி | வார்டு | வீடுகளின் எணிக்கை | குடியிருப்புகளின் எண்ணிக்கை | தேவைப்படும் செக்டார் பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது பணியில் உள்ள செக்டார் பணியாளர் எண்ணிக்கை | புதிதாக நியமிக்கப் பட்ட வேண்டிய செக்டார் பணியாளர்களின் எண்ணிக்கை | மேற்பார்வையாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 32 | 143 | 4484 | 10026 | 83 | 10 | 73 | 2 |
| | | 144 | 4686 | 6520 | 52 | 9 | 43 | 2 |
| | | 146 | 6037 | 7980 | 66 | 11 | 55 | 2 |
| | | 147 | 6350 | 7842 | 65 | 11 | 54 | 3 |
| | 33 | 145 | 4425 | 7152 | 60 | 8 | 52 | 2 |
| | | 148 | 5232 | 7894 | 66 | 10 | 56 | 2 |
| | | 149 | 4980 | 8116 | 68 | 9 | 59 | 2 |
| | | 152 | 5159 | 8147 | 68 | 11 | 57 | 2 |
| | 34 | 150 | 4769 | 7812 | 65 | 10 | 55 | 2 |
| | | 151 | 3360 | 6014 | 50 | 7 | 43 | 2 |
| | | 153 | 4300 | 6012 | 50 | 8 | 42 | 2 |
| | | 154 | 2737 | 4452 | 37 | 6 | 31 | 1 |
| | | 155 | 4652 | 7812 | 60 | 9 | 51 | 2 |
| | **Total** | | **611711** | **95779** | **790** | **119** | **671** | **26** |

மேற்கண்ட 695 பணியாளர்களில் 24 நிரந்தர பணியாளர்கள் போக. மீதமுள்ள 671 தற்காலிக பணியாளர்களுக்கு மட்டுமே மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணகெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 671 பணியாளர்களை (Servey Worker) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,

<u>ம.அ11.பொ.சு.து. ந.க. எண் எச்2/ 336/2020</u>

2. மேற்கண்ட 671 பணியாளர்களுக்கு (Survey Worker) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.15000/- வீதம், பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 671X15000X3=ரூ.3,01,95,000/- (ரூபாய் மூன்று கோடியே ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**இ.பொது.ந.க.எண்.எம்1/ 766/ 2020**

**தீர்மான எண்.323 / 2020** **நாள்:05-05-2020**

**இயந்திரப் பொறியியல் துறை-"கொரோனா வைரஸ்" தடுப்புப் பணி- வீடு வீடாகச் சென்று பொதுமக்கள் விவரம் சேகரித்தல்- களப்பணி செல்லும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 20,000 எண்ணிக்கையில் டி-சர்ட்டுகள் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு வெளிச்சந்தையில் டீ-சர்ட்டுகள் விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது- குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் Dumbell Lifestyle Pvt Ltd மற்றும் M/s Shree Kamali ஆகிய இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தலா 10,000 வீதம் 20,000 எண்ணிக்கையில் டீ-சர்டுகள் ரூ.89,40,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி .**

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus)மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, இந்திய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியால் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகிறது..

இதன் ஒரு பகுதியாக தற்பொழுது சென்னை மாநகரம் முழுவதும் வீடு வீடாகச் சென்று விவரம் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கென பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் மாதாந்திர ஊதியம் அடிப்படையில் தற்காலிக பணியாளர்கள் என 20,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது .இப்பணியாளர்களிடம் பொதுமக்கள் அச்சமின்றி விவரங்களை வழங்கிடும் வகையில் வீடு வீடாகச் சென்று கொரோனா தொற்று குறித்த விவரம் சேகரிக்கும் பணியாளர்களை மாநகராட்சியிலிருந்து அனுப்பப்பட்ட பணியாளர்கள் என அடையாளப்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயர் பதித்த டீ-சர்டுகள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதற்கான தோராய மதிப்பீடு ஒரு எண்ணிக்கையிலான டீ-சர்டின் விலை ரூ.525/- வீதம் (ஜி.எஸ்.டி 5%உட்பட) 20,000 எண்ணிக்கையிலான டீ -சர்டுகள் ரூ.1.05 கோடி செலவில் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.296/2020, நாள்.16.04.2020 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும்,, இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால் தற்போதைய ஊரடங்கு காலத்தில் வெளிச்சந்தையில் இத்தகைய பொருட்கள் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ள மன்றத் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டது.

அதன் அடிப்படையில் 20,000 எண்ணிக்கையில் டீ-சர்டுகள் கொள்முதல் செய்ய வெளிச்சந்தையில் டீ-சர்டுகள் வழங்கும் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதன்படி நான்கு நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்திருந்த நிலையில் திருவாளர்கள் Dumbell Lifestyle Pvt Ltd மற்றும் M/s Shree Kamali ஆகிய இவ்விரு நிறுவனங்களும் குறைந்த விலைப்புள்ளியாக ஒரு எண்ணிக்கையிலான டீ.-சர்டின் விலை ரூ.525/- வீதம் 20,000 எண்ணிக்கையிலான டீ-சர்டுகளுக்கு ரூ.1,05,00,000/-என வழங்கியுள்ளனர். இவ்விரு நிறுவனத்தாரையும் விலைகுறைப்பு செய்திட கேட்டுக் கொண்டதில் இவ்விரு நிறுவனங்களும் இறுதி விலைப்புள்ளியாக ஒரு டீ-சர்டின் விலை ரூ.447/- வீதம் 20,000 எண்ணிக்கையிலான டீ-சர்டுகளுக்குரூ.89,40,000/- என வழங்கியுள்ளனர். இந்த விலைப்புள்ளியானது தோராய மதிப்பீடான ரூ.1,05,00,000/-ஐ காட்டிலும் 14.86% குறைவாக இருந்ததால் இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தலா 10,000 வீதம் 20,000 எண்ணிக்கையிலான டீ- சர்டுகள் ஒன்றின் விலை ரூ.447/- என மொத்த தொகையான ரூ.89,40,000/. (ரூபாய் எண்பத்தொன்பது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) க்கு இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தலா 10,000 வீதம் கொள்முதல்

**இ.பொது.ந.க.எண்.எம்1/ 766/ 2020**

செய்ய மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி 18.04.2020 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு, திருவாளர்கள் *Dumbell Lifestyle Pvt Ltd* மற்றும் *M/s Shree Kamali* ஆகிய இரு நிறுவனங்களுக்கும் பணி ஆணை வழங்கப்பட்டு ரூ.89,40,000/-மதிப்பீட்டில் 20,000 எண்ணிக்கையில் டீ- சர்டுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது,

இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் . மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

எனவே,

1. கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பணியின் ஒரு பகுதியாக சென்னை மாநகரம் முழுவதும் வீடு வீடாகச் சென்று கொரோனா தொற்று குறித்த விவரம் சேகரிக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு மற்றும் மாதாந்திர ஊதியம் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கிட பெருநகர சென்னை மாநகராட்சி பெயர் பதித்த டீ-சர்டுகள் ஒரு டீ-சர்டின் விலை ரூ.447/- (ஜி.எஸ்.டி 5% உட்பட) வீதம் 20,000 எண்ணிக்கையிலான டீ-சர்டுகள் ரூ.89,40,000/-மதிப்பீட்டில் திருவாளர்கள் *Dumbell Lifestyle Pvt Ltd* மற்றும் *M/s Shree Kamali* நிறுவனங்களிடமிருந்து தலா 10,000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் ,
2. அவசர அவசியம் கருதி இக்கொள்முதல் மேற்கொள்ளப்படுவதால் பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
3. மொத்த கொள்முதல் விலையில் 50% தொகை முன்பணமாக வழங்க அனுமதி வேண்டியும்.
4. இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொண்டபின், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 22.04.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**<u>ம.க.கு.ந.க.எண். அ8/0455/2020</u>**

**தீர்மான எண்.324/2020** **நாள்:05-05-2020**

**<u>மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) - 01.01.2020 முதல் 31.03.2020 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.9% (ஏழு புள்ளி ஒன்பது சதவிகிதம்) மற்றும் 01.04.2020 முதல் 30.06.2020 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து அரசாணைகள் வழங்கப்பட்டது - இவ்வரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.</u>**

அரசாணை (நிலை) எண்.14, நிதி(படிகள்)த்துறை, நாள். 27.01.2020ல் பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) 2019-2020-ஆம் நிதியாண்டில் 01.01.2020 முதல் 31.03.2020 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.9% (ஏழு புள்ளி ஒன்பது சதவிகிதம்) என நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.231, நிதி(படிகள்)த்துறை, நாள். 23.04.2020ல் பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ்நாடு) 2020-2021-ஆம் நிதியாண்டில் 01.04.2020 முதல் 30.06.2020 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கீழ்கண்டுள்ள இவ்வரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்திட சிறப்பு அதிகாரி, (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறவேண்டும்.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.14, Dated 27th January, 2020.**
(Vikari, Thai-13, ThiruvalluvarAandu 2051)

**<u>ABSTRACT</u>**

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - **Rate of interest for the financial year 2019-2020 - With effect from 01.01.2020 to 31.03.2020** - Orders - Issued.

---

**Read the fo1lowing:-**

1. G.O.Ms.No.126, Finance [Allowances] Department, dated 24.04.2019.
2. G.O.Ms.No.223, Finance [Allowances] Department, dated 18.07.2019.
3. G.O.Ms.No.334, Finance [Allowances] Department, dated 24.10.2019.
4. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution F.No.5(2)-B(PD)/2019, dated 15.01.2020.

**-o0o-**

**<u>ORDER</u>:**

In the Government Orders first to third read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulation at the credit of the subscribers to G.P.F (TN) during the financial year 2019-2020 as detailed below:

| Sl. No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01-04-2019 to 30-06-2019 | 8.0% |
| 2. | II | 01-07-2019 to 30-09-2019 | 7.9% |
| 3. | III | 01-10-2019 to 31-12-2019 | 7.9% |

**2.** The Government of India, in its resolution fourth read above, announced that during the year 2019-2020, accumulation at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.9% (Seven point nine percent) with effect from 1st January, 2020 to 31st March, 2020.

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund [Tamil Nadu] shall carry interest at the rate of **7.9%** (Seven point nine percent) with effect from 1st January, 2020 to 31st March, 2020.

**4**. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in par-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.KRISHNAN,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.231, Dated 23rd April 2020.**
(Sarvari, Chithirai-10, Thiruvalluvar Aandu 2051)

**ABSTRACT**

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - **Rate of interest for the financial year 2020-2021 - With effect from 1-4-2020 to 30-06-2020** - Orders - Issued.

---

**Read the fo1lowing:-**

1. G.O.Ms.No.14, Finance [Allowances] Department, dated 27.01.2020.
2. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(2)-B(PD)/2020, dated 7-4-2020.

**-o0o-**

**ORDER:**

In the Government Order first read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulations at the credit of subscribers of G.P.F [TN] at **7.9%** (Seven Point nine percent) for the period from 1st January, 2020 to 31st March 2020.

**2.** The Government of India, in its resolution second read above, announced that during the year 2020-2021, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st April, 2020 to 30th June, 2020.

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund [Tamil Nadu] shall carry interest at the rate of **7.1% (Seven point one percent)** with effect from 1st April, 2020 to 30th June, 2020.

**4**. The rate of interest on belated final payment of Provident Fund accumulations remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rate as ordered in par-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.KRISHNAN,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

எனவே, பொது வருங்கால வைப்பு நிதி 01.01.2020 முதல் 31.03.2020 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.9% (ஏழு புள்ளி ஒன்பது சதவிகிதம்) என நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.14, நிதி(படிகள்)த்துறை, நாள். 27.01.2020 மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி 01.04.2020 முதல் 30.06.2020 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து அரசாணை (நிலை) எண்.231, நிதி(படிகள்)த்துறை, நாள். 23.04.2020ஐ பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணைகளை நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

**ம.அ.14/பொ.சு.து/ந.க.எண்.எச்1/2665/2020**

**தீர்மான எண்.325/2020** **நாள்:06-05-2020**

**மண்டலம்-14 - ஒப்பந்த தற்காலிகத் தொழிலாளர்கள் - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குழுக்கள் (NULM) பணிக்காலம் 03.05.2020 அன்றுடன் முடிவடைய உள்ளதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு (NULM) மூலம் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, பெருங்குடி பகுதியானது 168, 169, 183 முதல் 191 வரையிலான 11 வார்டுகளை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3108 சாலைகள் / தெருக்கள், 55632 வீடுகளும், சுமார் 3.86 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 55632 வீடுகளை 500 வீடுகளாக கொண்ட சிறுவட்டங்களாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி செய்வதற்கு 109 இருந்து 118 சிறுவட்ட பணியாளர்களைக் கொண்டு கொசு ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பாக்கிங்காம் கால்வாய், வீராங்கல் ஓடை மற்றும் பள்ளிக்கரணை எரி மொத்தம் 7.1 கி.மீ கொண்ட நீர்வழிப்பாதைகள் செல்கின்றன. இவற்றில் வாரந்தோறும் கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பணியாளர்களும், மேலும், 181,3 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாயில் சிறிய புகைப்பப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணியினை மேற்கொள்ளவும், வீடுகளில் கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணியினை மேற்கொள்ளவும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 26 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 160 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 03.05.2020 முடிவடைகிறது.

மண்டலம்- 14க்கு உட்பட்ட கோட்டம் 168, 169, 183 முதல் 191 வரை உள்ள பகுதிகளில் புதிய கட்டுமானப் பணிகள் அதிக அளவில் முடிக்கப்பட்டு அப்பகுதிகளில் மக்கள் குடியேறியுள்ள வீடுகளிலும் சேர்த்து 109 குறுக்கிய வட்டங்களில் இருந்து 118 ஆக குறுக்கிய வட்டங்கள் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது வீட்டிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள், கிணறுகள் மற்றும் மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணியினை மேற்கொள்ள கூடுதலாக 25 பணியளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 185 பணியளர்கள் கொசு ஒழிப்புக்கு தேவைப்படுகிறார்கள்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 160 ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்கு பணிபுரிய ஆணை பெறபட்டு பணி நடைபெற்று வருகிறது. அதற்குரிய ஒப்பந்த காலம் 03.05.2020 அன்றுடன் முடிவடைகிறது

எனவே, மண்டலம் 14ல் கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ் குறிப்பிட்டுள்ளபடி 185 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பணியமர்த்த வேண்டியுள்ளது..

மலேரியா பணியாளர்கள் NULM குழு

| வரிசை எண் | கோட்டம் | குழுவின் பெயர் | குழு குறியீட்டு எண் | உறுப்பினர் தற்போது எண்ணிக்கை | தேவைப்படும் உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 168 | தாமரை குழு | NULM-14-168-005 | 20 | 20 |
| 2 | 169 | குறிஞ்சி குழு | NULM-14-169-008 | 14 | 14 |
| 3 | 183 | செம்பருத்தி குழு | NULM-14-183-007 | 17 | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 184 | முல்லை குழு | NULM-14-184-004 | 16 | 20 |
| 5 | 185 | கதம்பம் குழு | NULM-14-185-007 | 12 | 16 |
| 6 | 186 | கனகாம்பரம் குழு | NULM-14-186-005 | 9 | 10 |
| 7 | 187 | ரோஜா குழு | NULM-14-187-003 | 8 | 9 |
| 8 | 188 | மல்லி குழு | NULM-14-188-008 | 12 | 14 |
| 9 | 188 | வாடா மல்லி குழு | NULM-14-188-009 | 12 | 13 |
| 10 | 189 | மனோ ரஞ்சிதம் குழு | NULM-14-189-005 | 12 | 16 |
| 11 | 190 | சூரியாகாந்தி குழு | NULM-14-190-004 | 13 | 16 |
| 12 | 191 | சம்பங்கி குழு | NULM-14-191-004 | 15 | 17 |
| மொத்தம் | | | | 160 | 185 |

மேற்கண்ட பணிக்குரிய தோராயமான செலவின விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | மொத்த கோட்டங்கள் | 11 |
| 2. | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | 185 |
| 3. | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 379 (Rupees three hundred and seventy nine only). |
| 4. | ஒரு நாளைக்கு 185 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 379 x 185= ரூ. 70,115/- (RUPEES SEVENTY THOUSAND ONE HUNDRED FIFTEEN ONLY). |
| 5. | நீட்டிப்பு காலமான 04.05.2020 முதல் 03.05.2021 வரை 185 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 379/- X 185X 365 days = ரூ. 2,55,91,975 (Rupees two crore fifty five lakhs ninty one thousand nine hundred and seventy five only). |
| 6. | பயன்படுத்தப்படும் கணக்கு குறியீடு | 30-32-04 (ANTI MOSQUITO OPERATION) /210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF - HEALTH WORKS) |

எனவே,

1. மண்டலம் - 14ல் 04.05.2020 முதல் 03.05.2021 வரை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுப்பதற்கு 185 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

2. இப்பணியாளர்களுக்கு 04.05.2020 முதல் 03.05.2021 வரை தேவையான செலவினத் தொகை ரூ.379/- X 185X 365 = ரூ. 2,55,91,975 (Rupees two crore fifty five lakhs ninty one thousand nine hundred and seventy five only)க்கு கணக்கு தலைப்பு எண்.30-32-04 (ANTI MOSQUITO OPERATION) 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF -HEALTH WORKS) செலவினத்தின் கீழ் செலவு செய்யவும்.

3. மத்திய அரசின் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்களாக இருப்பதால் இவர்களின் ஊதியத்தில் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்தும்விலக்கு அளிக்கவும்,

4. மண்டலம்- 14 பொது சுகாதாரத்துறையில் 185 பணியாளர்களைக் கொண்டு கொசு ஒழிப்பு பணியினை ஒராண்டு காலத்திற்கு 04.05.2020 முதல் 03.05.2021 வரை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 02.04.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.10/சு.து/ந.க.எண்.எச்2/4326 / 2020**

**தீர்மான எண்.326/2020** **நாள்:06-05-2020**

**மண்டலம் 10 – சுகாதாரத்துறை - கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை தொடர்பான கள ஆய்வு மூலமாக கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு சுயஉதவி குழுக்கள் மூலம் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 31/03/2020 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தின்படி மண்டலம் - 10குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கள ஆய்வு மேற்கொண்டு கணக்கெடுக்கும் பணியினை செய்வதற்கு தேவையான தற்காலிக பணியாளர்களை அரசின் விதிகளுக்குப்பட்டு மாத ஊதியம் ரூ.15,000/- வீதத்தில் மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தல் அவசியமாகிறது.

அதன் அடிப்படையில் ஏற்கனவே, மண்டலம் - 10ல் கோட்டம் 127 முதல் 142 வரையில் பணிபுரியும் 152 களப்பணியாளர்களுடன் கூடுதலாக 760 களப்பணியாளர்கள் சுய உதவி குழுக்கள் மற்றும் நகர்புற வேலை வாய்ப்பு குழு உறுப்பினர்கள் மூலமாக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு மண்டலம் - 10ன் பகுதிகளில் வாழும் மக்கள் பொருளாதார நிலை விவரம் கொரோனா நோய் அறிகுறி உள்ளவர்களின் விவரம் சேகரிப்பது மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் கிருமிநாசினி தெளிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு மேற்காணும் பணிகளை மேற்கொள்ளும் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு 03.04.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தப்பட்டுள்ளது, அதன் விவரம் கோட்டம் வாரியாக பின்வருமாறு :

| வ.எண். | கோட்டம் | ஏற்கனவே உள்ள நிரந்தர பணியாளர்கள் மற்றும் நகர்புற வேலைவாய்ப்பு குழு உறுப்பினர்கள் | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட மகளீர் சுய உதவி குழு உறுப்பினர்கள் | மொத்தம் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 127 | 14 | 70 | 84 |
| 2. | 128 | 13 | 65 | 78 |
| 3. | 129 | 9 | 45 | 54 |
| 4. | 130 | 7 | 35 | 42 |
| 5. | 131 | 10 | 50 | 60 |
| 6. | 132 | 10 | 50 | 60 |
| 7. | 133 | 8 | 40 | 48 |
| 8. | 134 | 7 | 35 | 42 |
| 9. | 135 | 7 | 35 | 42 |
| 10. | 136 | 6 | 30 | 36 |
| 11. | 137 | 15 | 75 | 90 |
| 12. | 138 | 11 | 55 | 66 |
| 13. | 139 | 10 | 50 | 60 |
| 14. | 140 | 7 | 35 | 42 |
| 15. | 141 | 7 | 35 | 42 |
| 16. | 142 | 11 | 55 | 66 |
| | **மொத்தம்** | **152** | **760** | **912** |

மேற்காணும் பட்டியலின்படி கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ள சுய உதவி உறுப்பினர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**<u>ம.அ.10/சு.து/ந.க.எண்.எச்2/ 4326 / 2020</u>**

எனவே,

அ) மண்டலம் - 10குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு கிருமிநாசினி தெளிப்பது, களஆய்வு மேற்கொண்டு நோய் அறிகுறி உள்ளவர்களை கண்டறிந்து விவரம் சேகரிப்பது மற்றும் அப்பகுதி மக்களின் பொருளாதார நிலை சேகரிப்பது போன்ற பணிகளுக்கு 760 தற்காலிக பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதியும்,

ஆ மேற்கண்ட 760 சுயஉதவி குழுக்கள் மூலம் தற்காலிக பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ஒரு பணியாளர்களுக்கு ரூ.15,000/- வீதம் 760 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 760 x 15000x 3 = 3,42,00,000/- (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) வழங்க அனுமதியும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**H.D.C.No.B1/2074/2020**

**Resolution No.327 /2020** **Date:06-05-2020**

**Health Department – COVID -19 relief work – Procurement of PPE Kits for the frontline health officials and for other GCC staff working in containment area – Rates obtained from TNMSC Ltd – Approval of rate for the purchase of 2.00 Lakh PPE Kits – For Administrative sanction.**

COVID-19 is declared as a global pandemic by World Health Organization (WHO). Across global as of today around 30 Lakh people are affected by this contagious viral disease.

The ICMR, GoI & GoTN has categorically emphasised that all the frontline health officials like Doctors, Nurses and Sanitary Workers who are working in the COVID-19 treatment hospitals and to all the field officials and staff who are working in the containment zones, sample taking centers and those involved in conservancy operation, house to house survey, disinfection activities in the disease hot spots. As of now 2300 Nos. of frontline workers, 3700 Nos. of other field staff are in the field and the daily requirement of PPE Kit is given as below.

| Sl.No. | Description | No. of PPE Kits requirement per day |
|---|---|---|
| 1. | Zonal Officials and Containment Zone | 3000 |
| 2. | CDH, Zonal Health office, Zonal Medical office | 300 |
| 3. | UCHC, UPHC, Dispensary and COVID-19 Lab | 2000 |
| 4. | Quarantine Centres and COVID-19 Care Centres | 700 |
| | **Total** | **6000** |

In the minutes of the meeting held by the Chief Secretary on 25.04.2020 it was instructed that to procure sufficient of PPE Kits by GCC itself at TNMSC rates to ensure the uninterrupted supply for the officials in the manner as stipulated above. Accordingly, the Commissioner and the Joint Commissioner (Health) has directed to procure around 2.00 Lakh PPE Kits to ensure uninterrupted daily supply to the above said officials and staff of Greater Chennai Corporation to ensure their safety.

In this regard, to meet the emergencies and to procure medical equipments of such emergency nature shall be procured directly from the market available suppliers in the market and from the vendors who can supply such large volume with good quality with timely delivery schedule, the Finance Department of GoTN has issued a Letter No. 74/JS (MA)/Finance (Salaries)/2020, Dated. 01.04.2020 which stipulated that the procurement can be made directly from the readily available vendors at the appropriate rates.

In the G.O.(Ms) No.161, Health and Family Welfare (H2) Department dated 27.03.2020, the Government has ordered that procurement of all equipment, consumables for medical care etc., which is related to the prevention and treatment and combating the above said Corona Virus COVID-19, be done under Section 16(a) of Tamilnadu Transparency in Tenders Act, 1998 and the provision of Section 9 and 10 of the said Act be exempted for all the procurement done by Tamilnadu Medical Services Corporation Limited for the above purpose.

The specification and the current approval rate for the Personal Protective Equipment (PPE) Kits has been furnished by the TNMSC Limited vide their Letter No.0505/M(P)/PPE/TNMSC/2020 dated 05.05.2020 from the MD, TNMSC Ltd.

**H.D.C.No.B1/2074/2020**

**Specification as fixed by TNMSC:**

| SL.No | Description |
|---|---|
| 1 | **Long Gown with separate Hood** –Disposable, Full Sleeved, Made up of Non-Woven Fabric (Spun Bonded, Polypropylene material not less than 90 GSM with filterable efficiency of 99% for particles of 3 Microns Size)<br>-Cuff with Elastics, Zipper (the length of Zipper should cover atleast 50% Length of the Gown) or three tags or Velcro (Covering atleast 50% of the length of gown) at the back.<br>-The waist belt should be fixed in front so that it can be tied at the back.<br>-Hood separate fully covering sided of face and neck / head and tags in the front.<br>**Size** - Approximate Minimum Length 125cm and Chest circumference atleast 135cm |
| 2. | **Shoe Cover**<br>-Disposable, Made up of polyester fabric with protective rubber coating preferably Tetoron with adequately padded foot base and can be used under field conditions.<br>-Disposable, Single Use, Free Size with Elastic Band at ankle and top<br>**Size** - Free Size |
| 3. | **Face Mask**<br>-Triple Layered Surgical Face Mask made of Non-Woven Material with Nose Piece having Filterable Efficiency of 99% for 3 Micron Particle Size |
| 4. | **Gloves**<br>-Disposable – High Quality Latex Gloves, Stretchable, Thin, Translucent, Preferably with rough Palmer Surface, Individually Packed in Single Pair<br>Size – $7^{1/2}$" |
| 5 | **Disposable Protective Eye Wear (Goggle)**<br>-With Transparent Glasses, Zero Power, Well Fitting with Elastic Band / or Adjustable Holder |

As per the rate received from TNMSC for each PPE Kit as Rs.431.20 (Inclusive GST). It is worked out to a total amount of Rs.8,62,40,000/- (Inclusive GST).

In order to purchase of PPE Kits, enquiry have been sent to the vendors who have the stocks on telephonic enquiry to meet the requirements of Greater Chennai Corporation based on the specification of TNMSC Ltd.,. Based on enquiry, the following 4 vendors namely (i) M/s.Reliant Global Green Engergy & Co., (ii) M/s.Saravana & Co, (iii) M/s.Standard Credit Services and (iv) M/s.Prasanth R are having adequate stocks and accepted the rate specified by TNMSC Ltd and to supply the PPE Kits on time.

Hence,

1. To accord Administrative Sanction for an amount of Rs. 8,62,40,000/- (Rupees Eight Crore Sixty Two Lakhs Forty Thousand only) (Inclusive GST) for the purchase of 2.00 Lakh PPE Kits at a rate of Rs.431.20 (Inclusive GST) under the Budget Head COVID-19 fund.

2. To approve the process of finalizing this rate without resorting to the normal tender procedure by following the guidelines framed in G.O.(Ms) No.161, H & FW (H2) Department, dated 27.03.2020 due to COVID-19 global pandemic which is a national emergency.

**H.D.C.No.B1/2074/2020**

3. To exempt from executing agreement and payment of security deposit from the Supplier for the supply of 2.00 Lakh PPE Kits to Greater Chennai Corporation.

4. 4.To approve buying of 50,000 Nos. PPE Kits from the following 4 vendors who have required stock.
   - (a) M/s.Reliant Global Green Engergy & Co.,
   - (b) M/s.Saravana & Co
   - (c) M/s.Standard Credit Services
   - (d) M/s.Prasanth R

Sl.No. 1 to 4 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.06.05.2020 is read.

**"Sl.No. 1 to 4 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

*******

**சு.து.ந.க.எண். பி2 / 1987 / 2020**

**தீர்மான எண்.328 / 2020** **நாள்:08-05-2020**

**பொது சுகாதாரத்துறை – நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி – பேரிடர் பணிகள் மேற்கொள்ள -அவசர அவசியம் கருதி பயிற்சி பெற்ற 500 சுகாதார ஆய்வாளர்களை ஒரு நபருக்கு மாதத்திற்கு ரூ. 20,000/- வீதம் மூன்று மாத காலத்திற்கு வெளிநிறுவனம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு தலைமைச்செயலர், அவர்களின் ஆணை நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை துறை கடிதம் எண், 01/CS/2020 நாள்.15.03.2020ல் இந்நோயினை கட்டுப்படுத்த பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடிவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 05.05.2020 வரை 2008 நபர்களுக்கு கொரோனா நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- நோய் தொற்று இருப்பதனை கண்டறியப்பட்டவர்களிடம் நேரிடையாக மற்றும் மறைமுகமாக தொடர்பு கொண்டவர்களை கண்டறிந்து நோய் தொற்று பரவாமல் இருக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 நடமாடும் பரிசோதனை மாதிரிகள் சேகரிக்கும் மையம் உட்பட மற்றும் 30 கொரோனா நோய் பரிசோதனை மாதிரிகள் சேகரிக்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றது.
- நோய் உறுதி செய்யப்பட்டவர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள் மற்றும் நோய் பாதிக்கப்பட ஏதுவாக உள்ள சுற்றி உள்ளவர்கள் விவரங்கள் (Contact Details) சேகரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 100 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் சுமார் 11,957 ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், மூச்சு திணறல் உள்ள நோயாளிகளை கண்டறிவர். ஒவ்வொரு நாளும் 10,88,140 வீடுகள் இப்பணியாளர்களால் பார்வையிடப்படுகிறது.
- இதுவரை 11,939 நபர்களுக்கு நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 11,372 நபர்கள் குணமடைந்துள்ளனர். 567 நபர்கள் தொடர் கண்காணிப்பில் உள்ளனர்.
- புளியந்தோப்பு, ராயபுரம், வியாசர்பாடி, சாலிகிராமம், விருகம்பாக்கம், நெற்குன்றம் மற்றும் திருவல்லிகேணி பகுதிகள் நோய் அதிகம் காணப்படுகிறது.
- கொரோனா நோய் தொற்று உள்ளவர்கள் வசிக்கும் பகுதிகள் கொரோனா நோய் தடுப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதுவரை 324 பகுதிகள் கொரோனா நோய் தடுப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த பகுதிகள் முழுவதும் நாளொன்றிற்கு இரண்டு முறை கிருமி நாசினி அனைத்து பகுதிகள் மற்றும் வீடுகளிலும் தெளிக்கப்பட்டு வருகின்றன.
- நோய் உறுதி செய்யப்பட்டவர்களை சுற்றியுள்ள குடும்பத்தினர் மற்றும் நெருங்கியவர்கள் தனிமைப்படுத்துவதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் 21,866 படுக்கை வசதிகள் இலக்கு வைத்து இதுவரை 8000 படுக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

**சு.து.ந.க.எண். பி2/1987/2020**

- நோய்தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக மாநகராட்சி சார்பில் பல்வேறு இடங்களில் சுமார் 21,108 படுக்கை வசதிகள் தயார் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.
- 407 அம்மா உணவங்களின் மூலம் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கப்பட்டு வருகின்றது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 388 கிருமி நாசினி தெளிப்பான்கள், 100 பேட்டரியால் இயங்கும் கிருமி நாசினி தெளிப்பான்கள், 279 விசை தெளிப்பான்கள், 199 கையால் எடுத்து செல்லக் கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள், 22 வாகனங்களில் எடுத்து செல்லப்படும் புகை பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 215 கனரக இயந்திரங்கள் மூலம் கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரையிலான 200 கோட்டங்களில் மேலே தெரிவிக்கப்பட்ட அனைத்து பணிகளும் கோட்ட அளவில் சுகாதார ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு கோட்டத்திற்கு 1 சுகாதார ஆய்வாளர் எண்ணிக்கை வீதம் 200 கோட்டத்திற்கு 200 சுகாதார ஆய்வாளர்கள் இருந்தால் மட்டுமே Covid 19 நோய் தடுப்பு பணிகளோடு அனைத்து பணிகளையும் எவ்வித குறைபாடுகளின்றி சிறப்புடன் செய்ய இயலும். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 108 சுகாதார ஆய்வாளர்கள் மட்டமே பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போதைய நிலையில் காலியாக உள்ள 92 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களிலும், மேலும், நோய் தொற்று அதிகம் உள்ள இடங்களில் கூடுதலாக 500 சுகாதார ஆய்வாளர்களை நியமிக்கும் பட்சத்தில் தொற்றுநோய் தடுப்பு பணிகளை மேலும் சிறப்புடன் துரிதமாகவும் மேற் கொள்ள இயலும்.

இயக்குனர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு துறை அவர்களின் 15.04.2020 நாளிட்ட கடிதத்தில், கொரோனா நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள பொது சுகாதாரத்துறையில் 500 சுகாதார ஆய்வாளர்களை (ஒரு சுகாதார ஆய்வாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.20000/ வீதம்) மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னைமாநகராட்சிக்கு தேவையான 500 சுகாதார ஆய்வாளர்களை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தலாம்.

**Qualification for Sanitay Inspector/Health Inspector**

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Sanitary Inspector / Health Inspector | 1. Must have passed plus two with Biology or Botany and Zoolay.<br>2. Must have passed Tamil language as a subject in SSLC level.<br>3. For those who have acquired Multipurpose Health Worker course/Sanitary Inspector Course in University affiliated/Government recognized institutions prior to 13.04.2017 plus two with Biology or Botany and Zoology with one year Multipurpose Health worker course. The syllabus followed in such institutions should be equivalent to the syllabus prescribed by the Director of Public Health and Preventive Medicine.<br>4. For those who have acquired Multipurpose Health Worker Course/Sanitary Inspector Course in University affiliated/Government recognized institutions after 13.04.2017 plus two with Biology or Botany and Zoology with two year Multipurpose Health Worker Course. |

**சு.து.ந.க.எண். பி2 / 1987 / 2020**

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம்(Administrative Charges ) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance (Salary upto Rs.21000) | | Employee's Provident Fund(Salary upto Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படி கொரானா நோய் தடுப்பு நடிவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, மேற்கண்ட சட்ட விதிகளின்படியும், கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| Sanitary Inspector/ Health Inspector | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 3 months Rs (6x7x3) |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | M/s.Gentleman Facility Management Pvt ltd. | 20000 | | 650 | 1700 | 4023 | 26373 | 500 | 39559500 |
| 2 | M/s.JASS INFRA | 20000 | | 650 | 2100 | 4095 | 26845 | 500 | 40267500 |
| 3 | M/s.Manpower India | 20000 | | 650 | 2800 | 4221 | 27671 | 500 | 41506500 |

இதில் M/s. Gentle Man, Chennai-18 நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு நடத்த பேச்சு வார்த்தை நடத்தியதில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர். எனவே, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கொரானா நோயின் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும் M/s. Gentle Man, Chennai-18 நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றுகொள்ளலாம்.

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 3 months Rs (6x7x3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Sanitary Inspector/ Health Inspector | 20000 | | 650 | 1700 | 4023 | 26373 | 500 | 39559500 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறயில் கொரானோ நோய் தொற்று காரணமாக நோய் தடுப்பு பணிக்கென 500 சுகாதார ஆய்வாளர்கள் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Gentle Man, Chennai-18 நிறுவனம் மூலம் பணியமர்த்த ரூ.3,95,59,500/- (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்)க்கு பணியாணை வழங்க அனுமதிக்கும்,
2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் சுகாதார ஆய்வாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.3,95,59,500/- (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) அனுமதிக்கும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும், மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கவும்,
5. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01, கணக்கு குறியீடு 230-70-12-04 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/ 617/ 2020**

**தீர்மான எண்.329/2020** **நாள்:08-05-2020**

**மண்டலம்-4 - சுகாதாரத் துறை - கோட்டம் -34 முதல் 48 வரை கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக 995 நபர்களை தற்காலிக பணியாளர்களாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.**

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் காணொலி காட்சி கலந்துரையாடலில் வழங்கப்பட்ட வாய்மொழி உத்தரவு நாள் 02.04.2020ல், மண்டலம்-4, சுகாதாரத் துறை, தண்டையரர்பேட்டையில் கோட்டம் 34 முதல் கோட்டம் 48 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,62,302 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமிக்க கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்டலம் 4 , சுகாதாரத் துறை, தண்டையார்பேட்டையில் ( கோட்டம் 34 முதல் 48 வரை ) 15 கோட்டங்களில் 162302 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 1182 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கெடுக்கும் பணிகளுக்கு தற்போது கூடுதலாக 995 நபர்களை மூன்று மாதங்களுக்கு தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15,000/- வீதம் 995 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,49,25,000/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு ரூ.4,47,75,000/- (எழுத்தால் ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண். | கோட்டம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செக்டார் எண்ணிக்கை | ஏற்கனவே உள்ள பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் | கோட்டம் வாரியாக 5 % (BUFFER) பணியாளர்கள் | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் ரூ. | மூன்று மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 34 | 13398 | 96 | 16 | 80 | 0 | 80 | 1200000 | 3600000 |
| 2 | 35 | 18803 | 132 | 22 | 110 | 0 | 110 | 1650000 | 4950000 |
| 3 | 36 | 13397 | 96 | 16 | 80 | 0 | 80 | 1200000 | 3600000 |
| 4 | 37 | 12505 | 90 | 15 | 75 | 0 | 75 | 1125000 | 3375000 |
| 5 | 38 | 10717 | 78 | 13 | 65 | 3 | 68 | 1020000 | 3060000 |
| 6 | 39 | 9785 | 72 | 12 | 60 | 0 | 60 | 900000 | 2700000 |
| 7 | 40 | 9945 | 72 | 12 | 60 | 0 | 60 | 900000 | 2700000 |
| 8 | 41 | 11612 | 84 | 14 | 70 | 4 | 74 | 1110000 | 3330000 |
| 9 | 42 | 8875 | 66 | 11 | 55 | 0 | 55 | 825000 | 2475000 |
| 10 | 43 | 9786 | 72 | 12 | 60 | 0 | 60 | 900000 | 2700000 |
| 11 | 44 | 7912 | 60 | 10 | 50 | 0 | 50 | 750000 | 2250000 |
| 12 | 45 | 12498 | 90 | 15 | 75 | 0 | 75 | 1125000 | 3375000 |
| 13 | 46 | 8002 | 60 | 10 | 50 | 0 | 50 | 750000 | 2250000 |
| 14 | 47 | 8875 | 66 | 11 | 55 | 3 | 58 | 870000 | 2610000 |
| 15 | 48 | 6192 | 48 | 8 | 40 | 0 | 40 | 600000 | 1800000 |
| **மொத்தம்** | | **162302** | **1182** | **197** | **985** | **10** | **995** | **1,49,25,000** | **4,47,75,000** |

**ம.அ.4/சு.து.ந.க.எண்.சு3/ 617/ 2020**

எனவே, மண்டலம் 4, தண்டையரர்பேட்டை, கோட்டம் 34 முதல் கோட்டம் 48 வரை உள்ள குறுவட்டப் பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,62,302 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரானா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 995 நபர்களை தற்காலிக பணியாளர்கள் நியமிக்க சிறப்பு அலுவலர்(மன்றம்) அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

(அ) மண்டலம்4. கோட்டம் 34 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் இதர மூலங்கள் மூலம் 995 தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும்,

(ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15,000/- வீதம் 995 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,49,25,000/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு = ரூ. 4,47,75,000/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதியும்,

(இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03 லிருந்து செலவு செய்யவும்,.

(ஈ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03ல் ரூ. 4,47,75,000/- நிதி ஆலோசகர் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட “அ” முதல் “ஈ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**““அ” முதல் “ஈ” வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.சே.து.ந.க.எண்.எப்5/ 0262/ 2020**

**தீர்மான எண்.330 / 2020** **நாள்:11-05-2020**

**பணியமைப்பு -மருத்துவ சேவைகள் துறை - திருமதி. V. கண்ணகி, பகுதி சுகாதார செவிலியர், வடபழனி (கிழக்கு) நகர சுகாதார நிலையம், தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம் - 9 அவர்கள் 11.05.2020 அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம் - 9ன் கீழ் இயங்கும் வடபழனி (கிழக்கு) நகர சுகாதார நிலையத்தில் பகுதி சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. V. கண்ணகி, அவர்கள் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், குடும்ப சூழ்நிலை காரணத்தாலும் பணிக்கு வர இயலாத நிலையில் உள்ளதால் தன் விருப்ப ஓய்வு வழங்க கோரி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு 12.02.2020 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

திருமதி. V. கண்ணகி அவர்கள் 10.11.1988 அன்று நகர சுகாதார செவிலியராக பணிபுரிந்து 01.10.2018 முதல் பணி மூப்பு அடிப்படையில் பகுதி சுகாதார செவிலியராக பணிபுரிந்து வருகிறார். இவர் நகர சுகாதார செவிலியர் பதவியில் 10.11.1988 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 10.11.1990 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம் அவர்களின் 27.02.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 23.03.2020 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை தணிக்கை பிரிவின் 02.04.2020 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ சேவைகள் துறையில் 10.11.1988 முதல் இந்நாள் வரை பணியாற்றிய காலத்திற்கு தனியர் மீது தணிக்கைத் தடை பத்தி நிலுவை இல்லையெனவும், மேலும் 2018-19 மற்றும் 2019 – 20 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 23.04.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 23.04.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் எனவும் மற்றும் நிலுவைத் தொகை இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 53 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 31 ஆண்டுகள் 06 மாதங்கள் 02 நாள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 20.03.1968. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.03.2026.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 31 ஆண்டுகள் 06 மாதங்கள் 02 நாள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி

**ம.சே.து.ந.க.எண்.எப்5/ 0262/ 2020**

(மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. *V*. கண்ணகி, பகுதி சுகாதார செவிலியர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, *2018 - 19* மற்றும் *2019 – 20* ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, *11.05.2020* அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 09.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/ 358 / 2020**

**தீர்மான எண்.331/2020** **நாள்:11-05-2020**

**மண்டலம்-3 - பொது சுகாதாரத்துறை - கோட்டம்-22 முதல் 33 வரை கொரோனா வைரஸ் கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக 527 நபர்களை தற்காலிக பணியாளர்களாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.**

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 02/04/2020 நாளிட்ட வாய்மொழி உத்தரவில் மண்டலம்-3 பொது சுகாதாரத்துறை மாதவரம் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள கொரோனா நோய் தடுப்பு பணிக்காக ஒரு குறுவட்டப்பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 மூதல் 150 வரையிலான வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 51,806 வீடுகளை 527 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறி கண்டறிந்து கணக்கு எடுக்கவும் மற்றும் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமிக்க கீழ்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டது.

மண்டலம்-3 சுகாதாரத்துறை மாதவரத்தில் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள 12 கோட்டங்களில் 51,806 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 525 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கு எடுக்கும் பணிக்கு தற்போது கூடுதலாக 527 நபர்களை மூன்று மாதங்களுக்கு தற்காலிக பணியாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத கால ஊதியம் ரூ.15,000/- வீதம் 527 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.79,05,000/- வீதம் என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ.2,37,15,000/- (ரூபாய். இரண்டு கோடியே முப்பத்து ஏழு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | கோட்டம் எண் | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | செக்டர்களின் எண்ணிக்கை | ஏற்கெனவே உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | தேவைப்படும் பணியாளர்கள் | கோட்ட வாரியாக எண்ணிக்கை (Buffer) | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் | மூன்று மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | 5456 | 11 | 11 | 55 | 0 | 55 | 825000 | 2475000 |
| 2 | 23 | 2796 | 6 | 6 | 30 | 0 | 30 | 450000 | 1350000 |
| 3 | 24 | 8872 | 18 | 18 | 90 | 2 | 92 | 1380000 | 4140000 |
| 4 | 25 | 2369 | 6 | 6 | 30 | 0 | 30 | 450000 | 1350000 |
| 5 | 26 | 7136 | 12 | 12 | 60 | 0 | 60 | 900000 | 2700000 |
| 6 | 27 | 4260 | 8 | 8 | 40 | 0 | 40 | 600000 | 1800000 |
| 7 | 28 | 4094 | 8 | 8 | 40 | 0 | 40 | 600000 | 1800000 |
| 8 | 29 | 2178 | 5 | 5 | 25 | 0 | 25 | 375000 | 1125000 |
| 9 | 30 | 2296 | 6 | 6 | 30 | 0 | 30 | 450000 | 1350000 |
| 10 | 31 | 2576 | 7 | 7 | 35 | 0 | 35 | 525000 | 1575000 |
| 11 | 32 | 4164 | 6 | 6 | 30 | 0 | 30 | 450000 | 1350000 |
| 12 | 33 | 5609 | 12 | 12 | 60 | 0 | 60 | 900000 | 2700000 |
| மொத்தம் | | 51806 | 105 | 105 | 525 | 2 | 527 | 7905000 | 23715000 |

எனவே, மண்டலம்-3, மாதவரம் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் குறுவட்டப்பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக ஒரு குறுவட்டப்பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 மூதல் 150 வரையிலான வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 51,806 வீடுகளை 527 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறி கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றம் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 527 நபர்களை தற்காலிக பணியாளர்களாக நியமிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் ஆணை பெறப்பட வேண்டும்.

**ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/ 358 / 2020**

எனவே,

அ) மண்டலம்-3 கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிக்கும் மற்றும் நோய் தொற்று பராமவல் தடுப்பு பணிக்கும் மகளிர் சுய உதவி குழு மற்றும் இதர மூலங்கள் மூலம் 527 தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும்,

ஆ)மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15000/- வீதம் 527 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.79,05,000/- வீதம் என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ.2,37,15,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஏழு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதியும்,,

இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண் 20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-70-12-03 லிருந்து செலவு செய்யவும்,.

மேற்கண்ட "அ" முதல் "இ" வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**""அ" முதல் "இ" வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

ம.அ.12/சு.து./ந.க.எண்.எச்-2/ 2010 / 2020

**தீர்மான எண்.332/2020** **நாள்:11-05-2020**

**மண்டலம் 12 - கொரனா வைரஸ் - தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தற்காலிகமாக 577 எழுத படிக்கத் தெரிந்த பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Workers) மாத ஊதியம் ரூ. 15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள 31.03.2020 அன்று நடைபெற்ற ஆணையர் அவர்களின் காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம் – 12ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல் இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 663 பணியாளர்களை (Survey Workers) 03.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டது. அதில் 577 எழுத படிக்கத் தெரிந்த பணியாளர்கள் மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | வார்டு எண் | எற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் | | | தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | DBC | | UHN | | |
| | | NULM | நிரந்தரம் | நிரந்தரம் | | |
| 1 | 156 | - | - | - | 135 | 135 |
| 2 | 157 | 11 | - | - | 58 | 69 |
| 3 | 158 | 4 | - | - | 25 | 29 |
| 4 | 159 | 1 | - | - | 11 | 12 |
| 5 | 160 | 5 | - | - | 41 | 46 |
| 6 | 161 | 7 | - | - | 43 | 50 |
| 7 | 162 | 10 | - | - | 43 | 53 |
| 8 | 163 | 9 | - | - | 21 | 30 |
| 9 | 164 | 9 | - | - | 37 | 46 |
| 10 | 165 | 8 | - | - | 55 | 63 |
| 11 | 166 | 11 | - | - | 54 | 65 |
| 12 | 167 | 9 | - | 2 | 54 | 65 |
| மொத்தம் | | 84 | - | 2 | 577 | 663 |

மேற்கண்ட பணியாளர்களில் 2 நிரந்தர பணியாளர்கள் ஆகும். 84 (NULM) தற்காலிக பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 30.10.2019 நாளிட்ட ஆணையின் படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 577 எழுத படிக்கத் தெரிந்த தற்காலிக பணியாளர்களுக்கு மட்டுமே மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம் – 12ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 577 எழுத படிக்கத் தெரிந்த பணியாளர்களை (Survey Workers) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 15,000/- வீதம், பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 577 x 15000 x 3 = ரூ. 2,59,65,000 (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வழங்க நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.9நக.எண்.எச்2 / 693 / 2020**

**தீர்மான எண்.333/2020** **நாள்:12-05-2020**

**மண்டலம்-9 – வார்டு- 109 முதல் 126 வரை- கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை – கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதி மற்றும் அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலம் குறித்த காய்ச்சல், இருமல் மற்றும் சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து - பதிவு மேற்கொள்ளும் பணி -975 எண்ணிக்கையிலான பணியாளர்களை அவசரம் மற்றும் அவசியம் கருதி 02.04.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

ஆணையர் அவர்களின் 01.04.2020 அன்று நடைபெற்ற காணொலி காட்சி மறு ஆய்வு கூட்டத்தில் வழங்கிய ஆலோசனையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு- 109 முதல் 126 வரையிலான பகுதிகளில் கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த காய்ச்சல், இருமல் மற்றும் சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும், தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெறும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, கொரானா நோய் மேலும் பரவாமல் தடுக்க மக்களின் உடல் நலன் குறித்த ஆய்வின் தகவல்களை கண்டறியவும், இணையதளம் மூலம் பதிவேற்றம் மேற்கொள்ளவும் மண்டலம்-9ல் உள்ள வீடுகளின் தொகுப்பின் அடிப்படையில் 975 எண்ணிக்கையிலான பணியாளர்களை பணியமர்த்தி அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை விரைந்து முடிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் ஆணை பெறப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-9, வார்டு- 109 முதல் 126 வரையிலான பகுதிகளில் கொரானா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும், தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெறும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும் 975 எண்ணிக்கையிலான பணியாளர்களை 02.04.2020 முதல் தற்காலிகமாக 3 மாதங்களுக்கு பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு ஆணையும்,.
2. மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15000/- வீதம் 975 எண்ணிக்கையிலான பணியாளர்களை 3 மாதங்களுக்கு அமர்த்தி கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.4,38,75,000/-க்கு(975x15000x3 மாதங்கள்) நிர்வாக அனுமதியும்,
3. மேற்கண்ட செலவினத்திற்கு கொரனா தடுப்பு பணிக்கான நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் உரிய பட்டிகளுடன் நேர் செய்ய அனுமதியும்,
4. கோட்டம் 109 முதல் 126 வரை 10 குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

<u>ம.அ.9.ந.க.எண்.எச்2 / 693 / 2020</u>

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.05.2020 மற்றும் 12.05.2020 நாளிட்ட குறிப்புகள் படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0790/ 2020</u>**

**தீர்மான எண்.334/2020** **நாள்:12-05-2020**

**<u>இயந்திரப் பொறியியல் துறை – கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை – தமிழக அரசு பொது சுகாதாரத் துறையின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்வதற்கு ஏதுவாக 40 எண்ணிக்கையில் சுகாதார மைய வாகனம் (Mobile Health Clinic) வழங்கப்பட்டது இவ்வாகனங்களுக்கு தேவையான ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டது மற்றும் எரிபொருள்கள் வழங்கியது – மற்றும் 10 வாகனங்களை Covid -19 மாதிரி சேகரிப்பு மையமாக மாற்றம் செய்வதற்கு அனுமதி.</u>**

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, மத்திய அரசும் மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொது மக்களை பாதுகாக்க போர்க்கால அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி உள்ள மக்களை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்வதற்கு ஏதுவாக தமிழக அரசு பொது சுகாதாரத்துறையிலிருந்து கீழ்கண்டுள்ள 40 எண்ணிக்கையிலான சுகாதார மையம் வாகனங்களை (Mobile Health Centre) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 22.04.2020 அன்று வழங்கியுள்ளார்கள். தற்பொழுது இவ்வாகனங்கள், மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கென பயன்படுத்தப்படுகிறது. இவ்வாகனங்களுக்கான ஓட்டுநர்கள் மற்றும் எரி பொருட்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டு வரப்படுகிறது. வாகனங்களின் விவரம் பின்வருமாறு:-

| Sl. NO | ZONE | No. of vehicles allotted | VEHICLE NO |
|---|---|---|---|
| 1 | I | 2 | TN09 G 2970 |
| 2 | | | TN09 G 2899 |
| 3 | II | 1 | TN09 G 2979 |
| 4 | III | 3 | TN09 G 3019 |
| 5 | | | TN09 G 2989 |
| 6 | | | TN09 G 2844 |
| 7 | IV | 4 | TN09 G 2959 |
| 8 | | | TN09 G 3009 |
| 9 | | | TN09 G 2981 |
| 10 | | | TN09 G 2965 |
| 11 | V | 4 | TN09 G 2836 |
| 12 | | | TN09 G 2889 |
| 13 | | | TN09 G 2863 |
| 14 | | | TN09 G 2865 |
| 15 | VI | 3 | TN09 G 2944 |
| 16 | | | TN09 G 2980 |
| 17 | | | TN09 G 2835 |
| 18 | VII | 2 | TN09 G 2994 |
| 19 | | | TN09 G 2854 |

| Sl. NO | ZONE | No. of vehicles allotted | VEHICLE NO |
|---|---|---|---|
| 20 | VIII | 3 | TN09 G 2958 |
| 21 | | | TN09 G 2984 |
| 22 | | | TN09 G 2821 |
| 23 | IX | 3 | TN09 G 3011 |
| 24 | | | TN09 G 3016 |
| 25 | | | TN09 G 2946 |
| 26 | X | 3 | TN09 G 2991 |
| 27 | | | TN09 G 2822 |
| 28 | | | TN09 G 2872 |
| 29 | XI | 3 | TN09 G 2850 |
| 30 | | | TN09 G 2986 |
| 31 | | | TN09 G 2860 |
| 32 | XII | 3 | TN09 G 2853 |
| 33 | | | TN09 G 3017 |
| 34 | | | TN09 G 2864 |
| 35 | XIII | 3 | TN09 G 2887 |
| 36 | | | TN09 G 2856 |
| 37 | | | TN09 G 2941 |
| 38 | XIV | 2 | TN09 G 2830 |
| 39 | | | TN09 G 2932 |

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0790/ 2020**

| | | | |
|---|---|---|---|
| 40 | XV | 1 | TN09 G 3001 |
| Total Number of Vehicles Allotted | | 40 | |

தற்போதுள்ள அவசர நிலையின் காரணமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி இவ்வாகனங்களை இயக்குவதற்குத் பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலுள்ள ஓட்டுநர்களும் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஓட்டுநர்களை வாடகை முறையிலும் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாகனங்களுக்கான எரி பொருள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் தேசிய சுகாதார திட்ட இயக்குநர் அவர்களின் 07.02.2020 நாளிட்ட கடிதத்தில், தமிழக அரசு பொது சுகாதாரத் துறையிலிருந்து வழங்கப்பட்டுள்ள 40 எண்ணிக்கையிலான வாகனங்களில் 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிரந்தரமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **S.NO** | **VEHICLE NO** | | **S.NO** | **VEHICLE NO** |
|---|---|---|---|---|
| 1 | TN09 G 2979 | | 6 | TN09 G 2980 |
| 2 | TN09 G 2844 | | 7 | TN09G2994 |
| 3 | TN09 G 2836 | | 8 | TN09 G 2946 |
| 4 | TN09 G 2865 | | 9 | TN09 G 2822 |
| 5 | TN09 G 2944 | | 10 | TN09 G 2887 |

இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து பரிசோதனைக்காக பாதுகாப்பாக மாதிரி சேகரிப்பு (Swap Test) பணிக்காக சாலையோரத்திலுள்ள வீடற்றோரை தங்குமிடத்திற்கு அழைத்து வருவதற்கென பயன்படுத்தப்பட்டு வரப்படும் கீழ்கண்ட 3 எண்ணிக்கையிலான Tempo Traveller வகை வாகனங்களை கொரோனா வைரஸ் தொற்று மாதிரி சேகரிப்பு மையமாக (Mobile Sample Collection Centre) பயன்படுத்திடும் வகையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி உரிய மாற்றங்கள் ஒரு வாகனத்திற்கு ரூ.60,000/- (GST சேர்த்து) வீதம் 3 வாகனங்களுக்கு மொத்தம் ரூ.1,80,000/- செலவீனத்தில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தி வரப்படுகிறது.

| **S.NO** | **VEHICLE NO** |
|---|---|
| 1 | TN04 AW 6166 |
| 2 | TN04 AW6194 |
| 3 | TN04 AW 6181 |

மேற்கண்ட (Mobile Sample Collection Centre) வாகனங்களின் மூலம் விரைந்து பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருப்பதன் அடிப்படையிலும் மற்றும் பாதுகாப்பான முறையில் மாதிரிகளை சேகரிக்கக் கூடியதன் அடிப்படையிலும் இவ்வகை வாகனங்களின் தேவை அதிகமாக உள்ளதால் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள 40 சுகாதார மைய வாகனங்களிலிருந்து (Mobile Health Centre) 10 எண்ணிக்கையில் வாகனங்களில் உரிய மாற்றங்கள் மேற்கொண்டு நடமாடும் மாதிரி சேகரிப்பு மையமாக பயன்படுத்திட இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

மேற்கண்ட 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்களை கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து பாதுகாப்பாக மாதிரி சேகரிக்கும் பணிக்காக நடமாடும் மாதிரி சேகரிக்கும் மையமாக பயன்படுத்துவதற்கு ஏதுவாக உரிய மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். எனவே, இவ்வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளதற்கான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் தமிழ்நாடு அரசு தேசிய சுகாதார நிறுவனம் (NHM) இருந்து பெற்று உரிய வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் இருப்பு பதிவேட்டில் பதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0790/ 2020**

தற்போதைய பேரிடர் அவசர காலத்தில் நடமாடும் மாதிரி சேமிப்பு வாகனத்தின் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்களை மாதிரி சேகரிக்கும் வாகனமாக (Mobile Sample Collecting Centre) மாற்றம் செய்யலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு அரசு தேசிய சுகாதார நிறுவனத்திடமிருந்து(NHM) மேற்கண்ட 10 வாகனங்கள் (MHC) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கும் பொருட்டு உரிய ஆணை மற்றும் வாகனங்களுக்கான ஆவணங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பெறுவதை எதிர் நோக்கி பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு இவ்வாகனங்களை உரிய முறையில் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதன்படி 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டில் இருந்த 3 எண்ணிக்கையிலான வீடற்றோருக்கான மீட்பு வாகனங்கள் என மொத்தம் 13 எண்ணிக்கையிலான வாகனங்களை கொரோனா வைரஸ் அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து பாதுகாப்பாக மாதிரி சேகரிக்கும் மையமாக (Mobile Sample Collection Centre) பயன்படுத்திடும் வகையில் உரிய மாற்றங்கள் செய்ய தோராயமாக ஒரு வாகனத்திற்கு ரூ.60,000/- வீதம் 13 வாகனங்களுக்கு ரூ.7,80,000/- செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், இவ்வகையான பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளலாம். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

01. பெருநகர சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டில் இருந்த கீழ்கண்ட 3 எண்ணிக்கையிலான வீடற்றோருக்கான மீட்பு வாகனங்களை கொரோனா வைரஸ் அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து பாதுகாப்பாக மாதிரி சேகரிக்கும் மையமாக (Mobile Sample Collection Centre) பயன்படுத்திடும் வகையில் உரிய மாற்றங்கள் செய்ய மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி பணி மேற்கொண்டதற்கு ஆணை வேண்டியும்,

| S.NO | VEHICLE NO |
|---|---|
| 1 | TN04 AW 6166 |
| 2 | TN04 AW 6194 |
| 3 | TN04 AW 6181 |

02. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி உள்ள மக்களை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக தமிழ்நாடு அரசு தேசிய சுகாதார நிறுவனத்திடமிருந்து(NHM) பெறப்பட்ட கீழ்கண்ட 40 எண்ணிகையிலான Mobile Health centre வகை வாகனங்களுக்கு மாநகராட்சி ஓட்டுநர்களை மற்றும் ஒப்பந்த ஓட்டுநர்கள் நியமித்ததற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| Sl. NO | ZONE | No. of vehicles allotted | VEHICLE NO |
|---|---|---|---|
| 1 | I | 2 | TN09 G 2970 |
| 2 | | | TN09 G 2899 |
| 3 | II | 1 | TN09 G 2979 |
| 4 | III | 3 | TN09 G 3019 |
| 5 | | | TN09 G 2989 |

| Sl. NO | ZONE | No. of vehicles allotted | VEHICLE NO |
|---|---|---|---|
| 20 | VIII | 3 | TN09 G 2958 |
| 21 | | | TN09 G 2984 |
| 22 | | | TN09 G 2821 |
| 23 | IX | 3 | TN09 G 3011 |
| 24 | | | TN09 G 3016 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | TN09 G 2844 | | 25 | | | TN09 G 2946 |
| 7 | IV | 4 | TN09 G 2959 | | 26 | X | 3 | TN09 G 2991 |
| 8 | | | TN09 G 3009 | | 27 | | | TN09 G 2822 |
| 9 | | | TN09 G 2981 | | 28 | | | TN09 G 2872 |
| 10 | | | TN09 G 2965 | | 29 | XI | 3 | TN09 G 2850 |
| 11 | V | 4 | TN09 G 2836 | | 30 | | | TN09 G 2986 |
| 12 | | | TN09 G 2889 | | 31 | | | TN09 G 2860 |
| 13 | | | TN09 G 2863 | | 32 | XII | 3 | TN09 G 2853 |
| 14 | | | TN09 G 2865 | | 33 | | | TN09 G 3017 |
| 15 | VI | 3 | TN09 G 2944 | | 34 | | | TN09 G 2864 |
| 16 | | | TN09 G 2980 | | 35 | XIII | 3 | TN09 G 2887 |
| 17 | | | TN09 G 2835 | | 36 | | | TN09 G 2856 |
| 18 | VII | 2 | TN09 G 2994 | | 37 | | | TN09 G 2941 |
| 19 | | | TN09 G 2854 | | 38 | XIV | 2 | TN09 G 2830 |
| | | | | | 39 | | | TN09 G 2932 |
| | | | | | 40 | XV | 1 | TN09 G 3001 |
| | | | | | Total Number of Vehicles Allotted | | 40 | |

03. மேற்கண்ட 40 வாகனங்களுக்கு தேவையான எரிபொருட்கள் பெருநகர மாநகராட்சி மூலம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

04. தமிழ்நாடு அரசு தேசிய சுகாதார நிறுவனத்திடமிருந்து (NHM) மேற்கண்ட 10 எண்ணிக்கையிலான வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கியதற்கான உரிய ஆணைகள் மற்றும் வாகனங்களுக்கான ஆவணங்கள் பெறுவதை எதிர்நோக்கி பெருநகர சென்னை மாநகராட்சியில் இருப்பு பதிவேட்டில் பதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்

05. அவசரம் அவசியம் கருதி, தமிழ்நாடு அரசு தேசிய சுகாதார நிறுவனம்(NHM) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ள கீழ்கண்ட 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்களை கொரோனா வைரஸ் தொற்று மாதிரி சேகரிப்பு மையமாக (Mobile Sample Collection Centre) பயன்படுத்திடும் வகையில் உரிய மாற்றங்கள் செய்திடவும்,

| S.NO | VEHICLE NO |
|---|---|
| 1 | TN09 G 2979 |
| 2 | TN09 G 2844 |
| 3 | TN09 G 2836 |
| 4 | TN09 G 2865 |
| 5 | TN09 G 2944 |

| S.NO | VEHICLE NO |
|---|---|
| 6 | TN09 G 2980 |
| 7 | TN09G2994 |
| 8 | TN09 G 2946 |
| 9 | TN09 G 2822 |
| 10 | TN09 G 2887 |

06. 10 எண்ணிக்கையிலான Mobile Health centre வாகனங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டில் இருந்த 3 எண்ணிக்கையிலான வீடற்றோருக்கான மீட்பு வாகனங்கள் என மொத்தம் 13 எண்ணிக்கையிலான வாகனங்களை கொரோனா வைரஸ் அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து பாதுகாப்பாக மாதிரி சேகரிக்கும் மையமாக (Mobile Sample Collection Centre) பயன்படுத்திடும் வகையில் உரிய மாற்றங்கள் செய்ய தோராயமாக ஒரு வாகனத்திற்கு ரூ.60,000/- வீதம் 13 வாகனங்களுக்கு ரூ7,80,000/- செலவில் மேற்கொள்ளவும்,

07. இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளலாம். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யவும்,

08. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், இவ்வகையான பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**திக.மே.பொ.ப.ச.ந.க.எண்.அ7/ 1265/ 2020**

**தீர்மான எண்.335/2020** **நாள்:12-05-2020**

**திடக்கழிவு மேலாண்மை துறை - கொரோனா நோய் தடுப்பு பணி - சில முக்கியமான இடங்களான கட்டுப்படுத்தப்பட்ட இடங்கள் உள்ள தெருக்களில், சந்தை இடங்கள், பஸ் நிலையங்கள் போன்றவை - கிருமிநாசினி கரைசல் மூன்று வேளையும் பயன்படுத்துவதற்கு - 500 மெட்ரிக் டன் பிளிச்சீங் பவுடர் கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகரில் """"கொரோனா நோய்"" பரவுவதலை தடுக்க முக்கியமான இடங்களான கட்டுப்படுத்தப்பட்ட இடங்கள் உள்ள தெருக்களில், சந்தை இடங்கள், சில முக்கிய தெருக்கள் போன்ற இடங்களில் கிருமிநாசினி ப்ளீச்சிங் பவுடர் கரைசல் தெளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்களின் 05.05.2020 அன்று நடத்தப்பட்ட கொரோனா நோய் தடுப்பு ஆய்வு கூட்டத்தில், சென்னை மாநகரில் உள்ள முக்கிய இடங்களான கொரோனா நோய் தடுப்பு பகுதிகளான கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளிலும், சந்தை இடங்கள் மற்றும் பிற இடங்களில் மூன்று வேலை கிருமிநாசினி கரைசல் தெளிக்கும் பணி ஈடுப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

மேற்கண்டவையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பிளிச்சிங் பவுடர் போதுமான இருப்பை வைத்திருப்பதற்கு 500 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

இதன்படி, 500 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்கான கணக்கீடு கீழ்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| (1) | பிளிச்சிங் பவுடர் தொகை – ஒரு மெட்ரிக் டன் | = | ரூ.31,000 |
| (2) | GST @ 18% | = | ரூ.5,580 |
| (3) | பிளிச்சிங் பவுடர் கொள்முதல் தொகை (வரி உட்பட) (1) + (2) | = | ரூ.36,580 |
| (4) | போக்குவரத்து செலவீனம் (ஒரு மெட்ரிக் டன்) | = | ரூ.2,000 |
| | **ஒரு மெட்ரிக் டன் செலவீனம் (3) + (4)** | = | **ரூ.38,580** |
| | 500 மெட்ரிக் டன் கொள்முதல் செய்வதற்கான செலவீனம்<br>**(ரூ.38,580 X 500 மெட்ரிக் டன் = ரூ.1,92,90,000 )** | = | **ரூ.1,92,90,000** |

எனவே,

(1) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட முக்கிய பகுதிகளில் கிருமிநாசினி பிளிச்சிங் பவுடர் கரைசல் தெளிப்பதற்கு அவசியம் கருதி 500 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செயவ்தற்கு செலவினத்தொகையான ரூ.1,92,90,000/-க்கு நிர்வாக அனுமதியும்,

(2) 500 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் தேவைக்கேற்ப கொள்முதல் செய்வதற்கு ரூ.1,92,90,000/- முன்பணமாக பெறுவதற்கு அனுமதியும்,

(3) Tamil Nadu Transparency in Tender Act' 1998ன் விதி எண்.16(a)ன் கீழ் மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு அனமதியும்,

**தி.க.மே.பொ.ப.ச.ந.க.எண்.அ7/ 1265/ 2020**

(4) சென்னை மாநகரில் கொரோனா நோய் தடுப்பு பணிக்கான அவசர அவசியத்திற்கான கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு வைப்புதொகை செலுத்துவதிலிருந்தும், ஒப்ப உடன்படிக்கையிலுருந்தும் விலக்கு அளிக்க அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

## தி.க.மே.பொ.ப.ச.ந.க.எண்.அ7/ 1290/ 2020

**தீர்மான எண்.336 / 2020** **நாள்:12-05-2020**

**திடக்கழிவு மேலாண்மைத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணி - பெருநகர சென்னை மாநகரில் உள்ள குடிசை பகுதி மக்களுக்கு 50,00,000 எண்ணிக்கையில் மறு உபயோகப்படுத்தும் வகையிலான பருத்தி முக கவசம் (Double layer Cotton Face mask) கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதி.**

அரசு தலைமை செயலாளர் அவர்களால் நடத்தப்பட்ட கொரோனா நோய் தடுப்பு ஆய்வு கூட்டத்தில், சென்னை மாநகரில் """"கொரோனா நோய்"" விரைவாக பரவுதலை தடுக்க பெருநகர சென்னை மாநகரில் உள்ள குடிசை பகுதி மக்கள் அனைவருக்கும் முக கவசம் வழங்க அறிவுறுத்தியுள்ளார்.

மேற்கண்டவையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு பகுதி மற்றும் இதர குடிசைப்பகுதிகளில் மொத்தம் 15 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். மேலும், மக்கள் தொகை நெருக்கமாக உள்ள குடிசை பகுதி என்பதால் இப்பகுதிகளில் கொரேனா நோய் தொற்று விரைவாக பரவக்கூடிய நிலை உள்ளது.

மேற்கண்ட நிலையில், தமிழக அரசு தலைமை செயலாளர் அவர்களின் உத்திரவின்படியும், ஆணையர் அவர்களின் அறிவுரையின்படியும், இப்பகுதி மக்களுக்கு 50,00,000 எண்ணிக்கையில் மறு உபயோகப்படுத்தும் வகையிலான பருத்தி முக கவசம் (Double layer Cotton Face mask) கொள்முதல் செய்வது அவசியமாகிறது. இதன்மூலம் ஒவ்வொருவருக்கும் மூன்று எண்ணிக்கை Double layer Cotton Face mask வழங்கி கொரோனா நோய் தடுப்பிற்கான போர்கால நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதன்படி, 50,00,000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கான கணக்கீடு கீழ்வருமாறு:

| வரிசை எண் | பொருளின் விவரம் | எண்ணிக்கை | ஒன்றுக்கு ரூ. | மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | பருத்தியிலான முக கவசம் (Double layer Cotton Face mask)<br>• 100%Cotton Face mask<br>• washable and reusable<br>• size 18cm x 18cm<br>• Thread type per tieing (4 threads 25cm length)<br>• Multiple colours<br>• Double layer | 50,00,000 | ரூ.15.00/- | ரூ.7,50,00,000/- |
| | | | GST 5% | ரூ.37,50,000/- |
| | | | மொத்த தொகை | ரூ.7,87,50,000/- |

எனவே,

(1) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட குடிசை பகுதி மக்கள் அனைவருக்கும் அவசியம் கருதி 50,00,000 எண்ணிக்கையில் மறு உபயோகப்படுத்தும் வகையிலான பருத்தி முக கவசம் (Double layer Cotton Face mask) கொள்முதல் செய்வதற்கான செலவினத்தொகை ரூ.7,87,50,000/-க்கு நிர்வாக அனுமதியும்,

**தி.க.மே.பொ.ப.ச.ந.க.எண்.அ7/ 1290/ 2020**

(2) 50,00,000 எண்ணிக்கையில் மறு உபயோகப்படுத்தும் வகையிலான பருத்தி முக கவசம் (Double layer Cotton Face mask) கொள்முதல் செய்வதற்கான செலவினத்தொகை ரூ.7,87,50,000/- முன்பணமாக பெறுவதற்கு அனுமதியும்,

(3) Tamil Nadu Transparency in Tender Act' 1998ன் விதி எண்.16(a)ன் கீழ் மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

(4) சென்னை மாநகரில் கொரோனா நோய் தடுப்பு பணிக்கான அவசர அவசியத்திற்கான கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு வைப்புதொகை செலுத்துவதிலிருந்தும், ஒப்ப உடன்படிக்கையிலிருந்தும் விலக்கு அளிக்க அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 2316/ 2017</u>**

**தீர்மான எண்.337 / 2020** **நாள்:12-05-2020**

**<u>திடக்கழிவு மேலாண்மை துறை - தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை துறையில் பணிபுரியும் 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader)- 1 நபர் 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert)-1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர்-1 நபர் நியமிக்கும் பணி - திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது - மேலும் 31.03.2021 வரை பணி நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி.</u>**

அரசு ஆணை (நிலை) எண்.12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV)துறை, நாள்.27.01.2016ன்படி, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader) 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert) -1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர்-1 நபர் ஆகியோர்களுக்கு ஊதிய மற்றும் பயிற்சி செலவினங்களை மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டது.

திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 13.07.2017 நாளிட்ட கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறையில் 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader) 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert) -1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர் -1 நபர் ஆகியோர்களை நியமிக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 2017 – 2018ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை துறை தூய்மை இந்தியா திட்டம் பணிகளை மேற்கொள்ள 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader) 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert) -1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர்-1 நபர் நியமிக்கும் பணியினை ஒரு வருட காலத்திற்கு 12.09.2017 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் பணிபுரிய 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader) 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert) -1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர்-1 நபர் இதனடிப்படையில் (12.09.2018 முதல் 11.09.2019 வரை) பணிபுரிய பணி நீட்டிப்பு வழங்குவதற்கு ஆணையர் அவர்களின் 05.09.2018 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், 12.09.2018 முதல் 11.09.2019 வரை பணிகால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதை தெரிவித்து திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தற்போது இதற்கான பணிகாலம் 11.09.2019ல் முடிவுபெற்றது.

அரசு ஆணை எண்.353, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.09.2019ல் குறிப்பிட்டுள்ளபடி, தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் 1. """"குழுதலைவர்-1 நபர் (Team Leader) 2. IEC நிபுணர் (Information Education and Communication Expert) -1 நபர் 3. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி-1 நபர் (Maintaining and Evaluation Expert (M&E) 4. தகவல் சேகரிக்கும் அதிகாரி-1 நபர் (Data Entry processing officer) மற்றும் 5. அலுவலக உதவியாளர்-1 நபர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/ 2316/ 2017**

மேலும், நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் *11.09.2019* நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை துறையில் பணிபுரிய *31.03.2020* வரையில் காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மார்ச் *2020*ல் நடைபெற்ற தூய்மை இந்தியா திட்ட மாநில உயர்மட்ட குழு கூட்டத்தின், குறிப்புரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*The committee may consider this proposal and approve the continuation of the same one unit of PMU at state level and 9 units of PIU at Regional level which was sanctioned in 2nd SHPC on 28.10.2015 for further extended mission period till 31st March 2021 or till the date the recommendations of the 15th Finance Commission come into effect whichever is earlier by following appropriate procedure under the CB and A&OE component of Swachh Bharat Mission.*

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியார் நிறுவனம் மூலம் செயல்பட்டுவரும் திட்ட அமலாக்க பிரிவு *(Project Implementation Unit- PIU)* பணிகாலம் *31.03.2021* வரை நீட்டிப்பு செய்து திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம்/ நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் திருவாளர்கள் ரீவார்டு சொசைட்டி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதம் நகல் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனம் மூலம் செயல்பட்டுவரும் திட்ட அமலாக்க பிரிவு *(Project Implementation Unit- PIU)* பணிகாலத்தினை *01.04.2020* முதல் *31.03.2021* வரை நீட்டிப்பு செய்ததற்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 12.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"திட்ட அமலாக்க பிரிவு அலுவலர்கள் பணிகாலத்தினை நீட்டிப்பு செய்ததற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**சு.து.ந.க.எண். பி1 / 2106 / 2020**

**தீர்மான எண்.338 / 2020** **நாள்:13-05-2020**

**பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ள - வெளிநிறுவனம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் கொரோனா நோய் உறுதி செய்யப்பட்ட நபரினை வீட்டிலேயே தனிமைப்படுத்தும் மேலாண்மையை உருவாக்கிட *(Home isolation Management for COVID positive cases)* அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020 அரசு தலைமைச்செயலர், அவர்களின் அறிவுரையில் இந்நோயினை கட்டுப்படுத்த பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடிவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 08.05.2020 வரை 3057 நபர்களுக்கு கொரோனா நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- நோய் தொற்று இருப்பதனை கண்டறியப்பட்டவர்களிடம் நேரிடையாக மற்றும் மறைமுகமாக தொடர்பு கொண்டவர்களை கண்டறிந்து நோய் தொற்று பரவாமல் இருக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நோய் அறிகுறி இல்லாத நபர்கள் அல்லது நோய் அறிகுறி குறைவாக உள்ள நபர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தி பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென M/s. PORTEA HEAL AT HOME, Bangalore-560 071 நிறுவனத்தினர் விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். மேலும் இப்பணிக்கென கீழ்க்கண்டவாறு தொகை வழங்க கோரியுள்ளனர்.

Set up cost: Rs.5.00 Lakhs

- Building of treatment plan based on protocol of COVID care protocol
- Set up of medical forms for capturing COVID related information
- Set up dedicated brand to manage the COVID patients under this programme.
- Set up of dashboard as mentioned earlier.

Program cost :Rs. 100 per person per day for a minimum of 21 days per patient.(i.e.,Rs.2100/-)

- Call Centre (calls and dedicated agents) to support a minimum of 500 home isolated patients.
- On call Doctor support after assessment and during escalations.
- Maintaining health details through patient records.
- Patient Management platform.
- Salaries of program management program.

| SNo. | Cost details | Total Amount (Rs) (Exclusive of Tax) |
|---|---|---|
| 1 | Set up cost | 5,00,000 |
| 2 | Program cost Rs.100 per person per day for a minimum of 21 days per patient.(i.e.,Rs.2100/-) approximately for 10000 positive cases (2100x10000) | 2,10,00,000 |
| | Total | 2,15,00,000 |

**சு.து.ந.க.எண். பி1 / 2106 / 2020**

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படி கொரானா நோய் தடுப்பு நடிவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(b) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கொரானா நோயின் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள M/s. PORTEA HEAL AT HOME, Bangalore-560 071 நிறுவனத்தினரின் விலைப்புள்ளியினை ஏற்றுகொள்ளலாம்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் கொரோனா நோய் உறுதி செய்யப்பட்ட நபரினை வீட்டிலேயே தனிமைப்படுத்தும் மேலாண்மையை உருவாக்குதல் (Home isolation Management for COVID positive cases) பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளி அளித்துள்ள M/s. PORTEA HEAL AT HOME நிறுவனம் மூலம் பணியமர்த்த ரூ. 2,15,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே பதினைந்து லட்சம் மட்டும்) (வரிகள் நீங்கலாக) பணியாணை வழங்க அனுமதிக்கும்,
2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 2,15,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே பதினைந்து லட்சம் மட்டும்) (வரிகள் நீங்கலாக) அனுமதிக்கும்,
இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள், தடை செய்யப்பட்ட பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு வருகை புரியும் அலுவலர் மற்றும் பொதுமக்கள் தங்களது கைகளை அடிக்கடி சுத்தம் செய்யும் வகையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் (SS Hand Washing Kiosk) ஆங்காங்கே வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 1000 எண்ணிக்கையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் SS Hand Washing Kiosk உடனடியாக கொள்முதல் செய்வது அவசியமாகிறது. எனவே, SS Hand Washing Kioskக்கான மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அலுவலர் அடங்கிய விலை நிர்ணயிக்கும் குழுவின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழுவின் 01.04.2020 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது. இதன் அடிப்படையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் SS Hand Washing Kiosk ஒன்றிற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.20,000/-என நிர்ணயம் செய்யப்பட்டது.

இதன்படி, 1000 எண்ணிக்கையில் SS Hand Washing Basin (Kiosk) கொள்முதல் செய்வதற்கான செலவினம் (20000 x 1000) ரூ.2,00,00,000/- (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) செலவில் கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே, கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கென கிருமி நாசினி தெளிக்கும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள நிலையில், 1000 எண்ணிக்கையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் ஆணையர் மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 732/ 2020**

தமிழக அரசு கடிதத்தில் (Letter No.74/JS (MA) Finance Salaries / 2020 dated. 01.04.2020), பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதன் அடிப்படையில் கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், இக்கொள்முதலை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் தற்போதைய ஊரடங்கு உத்தரவு காலத்தில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் 1000 எண்ணிக்கையில் தயார் செய்து வழங்கக் கூடிய திறனுள்ள தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. இவ்வொப்ப விலைப்புள்ளிகள் 03.04.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலைப்புள்ளிகளை வழங்கியுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:

| Sl. No. | Company Name | Description | Qty | Basic Rate / unit | GST @18%/Unit | Total Amount Inclu GST @18% per Vehicle |
|---|---|---|---|---|---|---|
| 1 | M/s. Rasi Sales Corporation | Portable Stainless Steel Hand Washing Kiosk(Sink) (As Per Specification) | 1000 Nos. | Rs.16822/- | 3028/- | 19850/- |
| 2 | M/s. Shree Balaji Traders | | | Rs.16822/- | 3028/- | 19850/- |
| 3 | M/s. Saraswathi Agencies | | | Rs.17119/- | 3081/- | 20,200 |

மேற்கண்ட அட்டவணையின் படி திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களும் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில் இவ்விரு நிறுவனங்களிடம் விலை குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது.

திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களும் தங்களது 03.04.2020 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

| Sl. No. | Name of the Company | Description | Qty | Unit Price Inclu. GST@18% | Negotiated rate if any | Final Rate (Rs)(Incl.GST@18% | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | M/s. Rasi Sales Corporation | Portable Stainless Steel Hand Washing Kiosk(Sink) (As Per Specification) | 1000 | 19850/- | 350/- | 19,500/- | |
| 2. | M/s. Shree Balaji Traders | | | 19850/- | 350/- | 19,500/- | |

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களும் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் தொட்டி (SS Hand Washing Kiosk) ஒன்றின் விலை ரூ.19,500/- என வழங்கியுள்ள விலைப்புள்ளியானது உயர்மட்ட அலுவலர்களைக் கொண்ட குழு நிர்ணயித்த விலையான ரூ.20,000/- காட்டிலும் 2.5% குறைவாகும், எனவே, திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களும் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் தொட்டி (SS Hand Washing Kiosk) வழங்குவதற்கு வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ஒன்றின் விலை ரூ.19,500/- என்பதனை

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 732/ 2020**

ஏற்று இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தலா 500 வீதம் மொத்தம் 1000 எண்ணிக்கையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் ரூ. 1,95,00,000/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) செலவினத்தில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டது.

இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள், தடைசெய்யப்பட்ட பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு வருகை புரியும் அலுவலர் மற்றும் பொதுமக்கள் தங்களது கைகளை அடிக்கடி சுத்தம் செய்யும் வகையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் (SS Hand Washing Kiosk) ரூ.1,95,00,000/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பகுதிகளுக்கு வருகை புரியும் அலுவலர் மற்றும் பொதுமக்கள் தங்களது கைகளை அடிக்கடி சுத்தம் செய்யும் வகையில் 1000 எண்ணிக்கையில் Stainless Steel தகட்டினால் செய்யப்பட்ட கை அலம்பும் பேசின் ஒன்றின் விலை ரூ.19,500/- வீதம் 1000 எண்ணிக்கையிலான உபகரணங்களை ரூ.1,95,00,000/- (inclu.GST@18%) (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களிடமிருந்து தலா 500 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3. இனம்-2 ஏற்பின் திருவாளர்கள். Rasi Sales Corporation மற்றும் திருவாளர்கள். Shree Balaji Traders ஆகிய இரு நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

4. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு ஒப்பங்கள் கோராமல் நேரிடையாக கொள்முதலை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்- 16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால். உபகரண தயாரிப்பாளர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று இக்கொள்முதலை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இந்நிறுவனத்துடன் பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

6. இக்கொள்முதலுக்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறை மூலதன நிதியிலிருந்து மேற்கொண்டபின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு பெற்ற பின் இத்தொகையினை நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 15.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**க.து.ந.க.எண்.பி1/ 641/ 2020**

**தீர்மான எண்.351/2020** **நாள்:22-05-2020**

**COVID-19 - ஒப்பம் 2019-2020 - கட்டடத்துறை - கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், தனிமைப்படுத்தும் அறைகளில் அட்டைகளில் செய்யப்பட்ட கட்டில் படுக்கைகள் 5000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.1,34,40,000/-க்கு நிர்வாக அனுமதியும் திருவாளர்கள் Vishnu Packaging அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும் அனுமதி .**

சென்னையில் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் நாளுக்கு நாள் அதிகமாகி வரும் சூழ்நிலையில், பெருகிவரும் கொரோனா நோயாளிகளை பராமரிப்பதற்கு மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள மாநகராட்சி / அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை ஆய்வு செய்து தற்காலிக தனிமைப்படுத்தும் மையங்களாக மாற்றுவதற்கு அந்தந்த மண்டல அலுவலர்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரும்பு கட்டில்கள் மற்றும் மடக்கும் கட்டில்கள் பெருமளவு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அதிகமாகி வருகின்ற நிலையில் உடனடியாக அதிகப்படியான கொள்முதல் செய்ய வேண்டிய நிலை உள்ளது. காகித அட்டை பெட்டிகள் தயாரிக்கும் பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட கட்டில்கள் விற்பனை செய்ய முகவர்கள் ஆணையர் மற்றும் துணை ஆணையர் (பணிகள்) ஆகியோரை அணுகி வருகின்றனர். இவ்வகையான கட்டில்களின் ஆயுட்காலம் ஆறுமாத காலம் எனவும் இதனை ஒருமுறை உபயோகப்படுத்திய பிறகு மறுபடியும் உபயோகப்படுத்த இயலாது எனவும் அறியப்படுகிறது. மேலும் இதுபோன்ற கட்டில்கள் மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் பெருமளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இந்த கட்டில்கள் ஒரே நாளில், ஆயிரக்கணக்கில் கொள்முதல் செய்ய முடியும். இது அவசர காலத்திற்காக மட்டுமே உபயோகப்படுத்த முடியம்

இப்பணியினை மண்டல அலுவலகங்கள் மூலமாக கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் இதற்காக பெறப்படும் முன்பணங்களை மண்டல அலுவலகங்கள் மூலமாக நேர் செய்யவும் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதலுக்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் துணை ஆணையர்(பணிகள்) அவர்கள் பல அடுக்கு காகிதங்களால் தயாரிக்கப்பட்ட குறைந்த ஆயுட்காலம் கொண்ட இவ்வகையான கட்டில்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டும் என கோப்பில் குறிப்பிட்டுள்ளதால் கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. .

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், தனிமைப்படுத்தும் அறைகளில் அட்டைகளில் செய்யப்பட்ட கட்டில் படுக்கைகள் 5000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண்.339/2020 நாள் 14.05.2020. |
| 3 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,34,40,000.00 |
| | பணி செலவு<br>The Bed is manufactured out of 9 parts using plain brown colour or golden brown colour (5legs+3planks along with few fitment elements) (5000 Nos)<br>5000X2400=12000000 | ரூ. 1,20,00,000.00 |

| | | |
|---|---|---|
| | (ஆ) GST 12% | ரூ. 14,40.000.00 |
| | தோராய மதிப்பீடு | ரூ. **1,34,40,000.00** |
| 4 | விலைப்புள்ளிகள் பெறப்பட்ட நாள் | 06.05.2020 |
| 5 | நிதியின் தன்மை | COVID-19 |
| 6 | எத்தனை விலைப்புள்ளிகள் பெறப்பட்டன | மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. |

மேற்கண்ட பணிக்காக06.05.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. விலைப்புள்ளிகள் அளித்தவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | Vishnu Packaging | 1,20,00,000 | 1,20,00,000 |
| 2 | Bhoomika Packaging | 1,20,00,000 | 1,37,50,000 |
| 3 | Divaine Industries | 1,20,00,000 | 1,35,00,000 |

கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன வளாகங்கள், தனிமைப்படுத்தும் அறைகளில் அட்டைகளில் செய்யப்பட்ட கட்டில் படுக்கைகள் 5000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் பணிக்காக 06.05.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. விலைப்புள்ளிகள் 06.05.2020 அன்று திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் Vishnu Packaging அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,20,00,000 ஆகும். ஒப்பந்ததாரரை விலை குறைப்பு செய்ய கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள் *Vishnu Packaging* அவர்கள் கொரானா வைரஸ் தாக்கத்தின் காரணமாக காகித உற்பத்தி செய்ய இயலாததாலும் உற்பத்திக்கான வேலையாட்கள் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என 14.05.2020 அன்று மின்னஞ்சல் மூலமாக அளித்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்பத்தொகை விவரங்கள்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | பணியின் மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 12% சேர்த்து |
|---|---|---|---|
| Vishnu Packaging | 1,20,00,000 | 1,20,00,000 | 1,34,40,000 |

இப்பணியினை மண்டல அலுவலகங்கள் மூலமாக மேற்கொள்ள சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதலுக்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் துணை ஆணையர்(பணிகள்) அவர்கள் பல அடுக்கு காகிதங்களால் தயாரிக்கப்பட்ட குறைந்த ஆயுட்காலம் கொண்ட இவ்வகையான கட்டில்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டும் என கோப்பில் குறிப்பிட்டுள்ளதால் கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டும் என சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

எனவே,

1) மேற்கண்ட பணிக்கு ரூ.1,34,40,000க்கு க்கு நிர்வாக அனுமதியும்
2) Sec 16 (a) TNTT Act ன்படி பணி ஆணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
3) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Vishnu Packaging* அவர்களின் இறுதி ஒப்பத் தொகை ரூ.1,20,00,000, சரக்கு மற்றும் சேவை வரி 12 விழுக்காடு தொகை ரூ.14,40,000 உடன் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,34,40,000க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வழங்கப்பட்ட ஒப்பத்தினை ஏற்கவும்,
4) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்களிக்கவும்,

5) இப்பணிக்காக 75 சதவீதம் முன்பணம் பெற்று பணி மேற்கொள்ளவும்,
6) மேற்கண்ட முன்பணத்தினை பணிநிறைவுற்ற பின்னர் இது சம்மபந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் அவர்களால் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 14.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**க.து.ந.க.எண்.பி1/ 644/ 2020**

**தீர்மான எண்.352/2020** **நாள்:22-05-2020**

**COVID-19 - கட்டடத்துறை - பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 1000 நபர்களுக்கு 30 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூ.1,23,90,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டிற்கு நிர்வாகஅனுமதி .**

பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு ஒரு நபருக்கு 14 நாட்களுக்கு காலை முதல் இரவு வரை 1000 நபர்களுக்கு 30 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிக்காக காலை முதல் இரவு வரை நாள் ஒன்றுக்கு 350 வீதம் 1000 நபர்களுக்கு 30 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு கீழ்கண்டவாறு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | பணியின் பெயர் | பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 1000 நபர்களுக்கு 30 நாட்களுக்கு உணவு வழங்குபணி. |
| | மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,23,90,000.00 |
| | பணியின் தோராய மதிப்பு தொகை 350 X1000X30=10500000 | ரூ. 1,05,00,000.00 |
| | (அ) GST 18% | ரூ. 18,90,000.00 |
| | மொத்தம் | ரூ. 1,23,90,000.00 |
| 4 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண். | COVID-19 |

எனவே,

1) பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 1000 நபர்களுக்கு 30 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூ.1,23,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டின் (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2) Sec 16 (a) TNTT Actன்படி பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,
3) இப்பணிக்காக 50 சதவீதம் முன்பணம் பெற்று பணி மேற்கொள்ளவும்,
4) மேற்கண்ட முன்பணத்தினை பணிநிறைவுற்ற பின்னர் சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் அவர்களால் நேர் செய்யவும்,

<u>க.து.ந.க.எண்.பி1/ 644/ 2020</u>

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**S.W.D.C.No.B4/3146/2018**

**Resolution No.353 /2020** **Date:27-05-2020**

**Greater Chennai Corporation- Storm Water Drain Department – Integrated Storm Water Drain Project(ISWD) under Kovalam Basin consisting of 3 major component (M1, M2 & M3) at an estimated cost of Rs.1243.15 crore with the loan from KfW (German Development Bank) – Operation and Maintenance of drains by the concerned zones from the General Fund of GCC – Confirmation to be given to KfW- Proposed submitted – For approval.**

The Hon'ble Late Chief Minister of Tamil Nadu in the floor of the assembly has announced during the year 2014 to construct Integrated Storm Water Drain network in extended areas of Greater Chennai Corporation under G.O.Ms.No.1, MA&WS dt 02.01.2015 at a cost of Rs.4034 crore in the Adyar and Cooum Basin, Kosasthalaiyar Basin and Kovalam Basin

In first phase, in Adyar and Coovum basins, work has been taken up with World Bank funding assistance in the year 2016 under Tamil Nadu Sustainable Urban Development Project (TNSUDP) at a project cost of Rs.1387.27 crore. Works have been taken up to a length of 406 km and completed. All the areas covered under this scheme have witnessed a phenomenal decrease in water inundation locations.

As far as the ISWD project for Kovalam Basinis concerned, agreement has been signed between GCC and German Development Bank (KfW) for funding the project implementation at a cost of Rs.1,243.15 crore to a length of 360 km. Kovalam Basin constitutes 3 major components viz., M1 (Pallikaranai Swamp Watershed), M2 (South Buckingam Canal Watershed), M3 (South Coast Watershed)

For the construction of Integrated Storm Water Drain network in M3 component to a length of 52 km at an estimated cost of Rs.270.38 crore, work order has been issued. For M1 and M2 component which covers areas like Thoraipakkam, Perungudi, Pallikaranai, Palavakkam, Injambakkam, Karapakkam and Madipakkam, KfW is finalising the appointment of Design and Project Management Consultant. Preliminary works are proposed to commence by July 2020.

Apart from construction of storm water drain in the extended areas, Greater Chennai Corporation maintains 8835 numbers of storm water drains to a length of 2071 km all these drains are well connected from collecter drains to arterial drains and disposed at bigger canals and rivers.

Greater Chennai Corporation on a routine basis in order to ensure the proper operation of the storm water drainage system de-silts the drains and canals and also undertakes the minor repairs in storm water drains thoroughly before onset of monsoon.

Desilting operations of storm water drains in GCC are done by the respective zones. The desilting of storm water drains is done in a cyclic manner and is carried out twice in a year. This activity is being carried out in a weekly programmed manner throughout the year. The removed silt will be cleared immediately and transported to the designated place through vehicles.

Apart from this Greater Chennai Corporation also maintains 30 canals to a length of 49 km being regularly desilted and Hyacinth removed using modern machineries. GCC has procured 3 Multipurpose Robotic Excavator for de-siltation of Micro Canals from Switzerland and an Amphibian vehicle from Finland at a cost of Rs. 4.10 crore for desilting of Macro Canals. Due to this, the carrying capacity of all these major water carrying channels have been increased to 100%.

**S.W.D.C.No.B4/3146/2018**

To provide the flood control, water quality protection, and other benefits for which stormwater systems are constructed, it is essential that maintenance and management be performed on a regular basis. As both the number of systems and the reliance upon them grows, the importance of storm water system O&M grows accordingly. The regular operation and maintenance of storm water drains are being done by the respective zones. Regular budgetary provisions are given every year in the annual budget of the Greater Chennai Corporation for operation and maintenance of storm water drains. The maintenance expenditure will be incurred based on provisions in the budget from the General Funds available under the head of operation and maintenance of storm water drains.

The KfW is requesting the confirmation from GCC that the expenditure towards the annual maintenance work on these drains would not be appropriated for KfW fund.

In this regard, it is submitted that after completion of construction of storm water drain, the defects and liability period of 2 years, the work of Operation and Maintenance such as desilting and minor repairs on the storm water drains constructed in Kovalam Basin will be met out by the concerned zones from General Fund of GCC. Hence, the loan amount received from the KfW will not be utilized for Operation and Maintenance work. This confirmation shall be sent to KfW as a letter from Commissioner along with Special Officer in Council Resolution copy (in English). Orders of the Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.26.05.2020 is read.

**"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0731/ 2020**

**தீர்மான எண்.354 / 2020** **நாள்:28-05-2020**

**இயந்திரப் பொறியியல் துறை - "கொரோனா வைரஸ்" தடுப்பு முன்னெச்சரிக்கை பணிக்காக - கிருமி நாசினி தெளிக்கும் / பரவவிடும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் - பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 2 எண்ணிக்கையில் மின்சாரம் மூலம் இயங்கும் *Canon Mist Spraying Machine* கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது - குறைந்த மற்றும் ஒரே விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *SB Industries* மற்றும் *M/s ASN Hydro Systems India Pvt Ltd* நிறுவனத்தாரிடமிருந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, இந்திய அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லாத மாநிலமாக நிலை நிறுத்த போர்க்கால அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு ஏற்ப இயந்திரங்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, இவ்வகை உபகரணங்கள் வெளிச்சந்தையில் உள்ளது குறித்து ஆராயப்பட்டு , எளிதில் கையாளக்கூடிய கிருமி நாசினி தெளிப்பாண்கள் சந்தையில் இருப்பது கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மூன்று வகையான கிருமி நாசினி தெளிப்பான்கள் கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் 16.03.2020 அனுமதி பெறப்பட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் கிருமி நாசினி நிரப்பப்பட்ட தொட்டியின் மீது மின்சார மோட்டார் பம்பு, Blower இயந்திரம் ஆகியவை உள்ளடங்கிய Mist Spraying Machine பொருத்தி கிருமி நாசினி அதிக அழுத்தத்துடன் அதிக தூரத்திற்கு தெளிக்கவும் மற்றும் பனிபோல படர விடவும் முடியும் என கண்டறியப்பட்டது. இந்த கிருமி நாசினி இயந்திரம் மூலம் அகன்ற சாலை, பெரு வணிக மற்றும் அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் திறந்த வெளிப்புறத்திலும் மற்றும் கட்டிடத்தின் வெளிப்புறத்திலும் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் கிருமி நாசினி தெளிக்கலாம்.

தற்போது மாநகராட்சியில் பூங்கா பராமரிப்பிற்காக பயன்படுத்தி வரப்படும் தண்ணீர் லாரியின் (HMV Water Tanker) தொட்டியில் கிருமி நாசினி கலந்து மேற்கண்ட மின்சாரத்தால் இயங்க கூடிய Mist Spraying Machine பொருத்தி கிருமி நாசினி தெளிக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் Mist Spraying Machine இயங்குவதற்கு தேவையான மின்சாரத்திற்காக 30Kva திறனுள்ள Genset-ஐ தனியாரிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்று தண்ணீர் லாரியில் பொருத்தலாம். மேலும் கொரோனா வைரஸ் தடுப்பு பணி முடிவுற்ற பின் தண்ணீர் லாரியில் இருந்து Mist Spraying Machine அகற்றிவிட்டு தண்ணீர் லாரியினை பூங்கா பராமரிப்பிற்காகவும் மற்றும் Mist Spraying Machine-னை குப்பை கொட்டும் தளங்களில் Dust Separator ஆகவும் பயன்படுத்தலாம்.

இந்நிலையில், 01,04,2020 நாளிட்ட அரசு கடிதத்தில் (Letter No.74/JS (MA)/ Finance (salaries/2020 Dated:01.04.2020) பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ள நிலையில். இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், மேலும் இக்கொள்முதலை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் இவ்வகை உபகரணங்கள் Mist Spraying Machine தயாரிப்பாளர்களிடமிருந்து விலைப்புள்ளி

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0731/ 2020**

கோரப்பட்டு 03.04.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலைப்புள்ளியினை வழங்கியிருந்தனர்.

| Sl. No | Name Of the Company | Description | Quantity | Unit Rate (Exclu..GST) | GST@18% | Unit Rate Inclu.GST@18% |
|---|---|---|---|---|---|---|
| 1. | M/s ASN Hydro Systems Pvt Ltd | Vehicle Mounted Electrical Driven Canon Mist Spraying Machine of Reputed Make & Model | 2 Nos. | Rs.5,20,000/-- | 93,600/- | 6,13,600/- |
| 2. | M/s SB Industries | | | Rs.5,20,000/-- | 93,600/- | 6,13,600/- |
| 3 | M/s G Max Engineering Services | | | Rs.5,70,000/- | 1,02,600/- | 6,72,600/- |

மேற்கண்ட அட்டவணையின் படி, திருவாளர்கள் ASN Hydro Systems Pvt Ltd மற்றும் M/s SB Industries நிறுவனத்தாரும் குறைவாகவும் ஒரே விலை புள்ளியும் வழங்கியுள்ள நிலையில், இவ்விரு நிறுவனத்தாரையும் மேலும் விலைக்குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள் ASN Hydro Systems Pvt Ltd மற்றும் M/s SB Industries ஆகிய நிறுவனத்தாரும் தங்களது 03.04.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக விலைகுறைப்பு ஏதும் செய்யாமல் மீண்டும் அதே விலை புள்ளிகளையே வழங்கியிருந்தனர்.

| Sl. No. | Name Of the Company | Description | Qty | Before Negotiation Inclu.GST@18% | Negotiated rate if any | Final Rate (Rs)(Incl.18 %GST |
|---|---|---|---|---|---|---|
| 1. | M/s ASN Hydro Systems Pvt Ltd | Vehicle Mounted Electrical Driven Canon Mist Spraying Machine of Reputed Make & Model | 2 | Unit Price Rs.6,13,600/- | Nil | Unit Price Rs.6,13,600/- |
| 2. | M/s SB Industries | | | Unit Price Rs.6,13,600/- | Nil | Unit Price Rs.6,13,600/- |

திருவாளர். ASN Hydro Systems Pvt Ltd மற்றும் M/s SB Industries நிறுவனத்தாரும் கனரக தண்ணீர் லாரியில் (HMV Water Tanker) பொருத்துவதற்கு ஏற்ற மின்சாரத்தால் இயக்கக் கூடிய Canon Mist Spraying Machine—உபகரணத்தினை வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான உபகரணம் ஒன்றின் விலை ரூ.6,13,600/-வீதம் 2 எண்ணிக்கையிலான உபகரணங்களை ரூ.12,27,200/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இரு நூறு மட்டும்) மதிப்பீட்டில் இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தலா ஒன்று வீதம் மன்றத்தின் பின்னேற்பினை எதிர் நோக்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது

இதற்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை பணிக்காக கனரக தண்ணீர் லாரியில் (HMV Water Tanker) பொருத்துவதற்கு ஏற்ற மின்சாரத்தால் இயக்கக் கூடிய Canon Mist Spraying Machine-கள் 2 எண்ணிக்கையில் ரூ.12,27,200/- Inclu.GST@18%) மதிப்பீட்டில் (ரூபாய். பன்னிரெண்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இரு நூறு மட்டும்)க்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 0731/ 2020**

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை பணிக்காக கனரக தண்ணீர் லாரியில் *(HMV Water Tanker)* பொருத்துவதற்கு ஏற்ற மின்சாரத்தால் இயக்கக் கூடிய *Canon Mist Spraying Machine* ஒன்றின் விலை ரூ6,13,600/- (*inclu.GST@18%*) வீதம் 2 எண்ணிக்கையிலான உபகரணங்களை ரூ. 12, 27,200/- (*Inclu.GST@18%*) மதிப்பீட்டில் (ரூபாய். பன்னிரெண்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இரு நூறு மட்டும்)க்கு திருவாளர். *ASN Hydro Systems Pvt Ltd* மற்றும் *M/s SB Industries* நிறுவனங்களிடமிருந்து தலா ஒன்று வீதம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. இனம்-1ஏற்பின் திருவாளர். *ASN Hydro Systems Pvt Ltd* மற்றும் *M/s SB Industries* ஆகிய இரு நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
4. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதை பின்பற்றி உபகரண தயாரிப்பாளர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று இக்கொள்முதலை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இந்நிறுவனத்துடன் பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
6. இக்கொள்முதலுக்கான செலவீனத்தை இயந்திரப் பொறியியல் துறை மூலதன நிதியிலிருந்து மேற்கொண்டபின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு பெற்ற பின் இத்தொகையினை நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 22.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**<u>வ.து.ந.க.எண்.ஜி1/ 1847/ 2020</u>**

**தீர்மான எண்.355/2020** **நாள்:28-05-2020**

**<u>சொத்துவரி – பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய் துறை – கொரோனா வைரஸ் தொற்று பரவல் *(Covid 19)* – ஊரடங்கு உத்தரவு - சொத்துவரி, தொழில்வரி உட்பட வரி வருவாய் இனங்கள் செலுத்த காலக்கெடு *30.06.2020* வரை தள்ளிவைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் பார்வைக்காகவும் மற்றும் தகவலுக்காகவும்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையின் முக்கிய வருவாய் இனங்களான சொத்துவரி, தொழில்வரி மற்றும் தொழில் உரிமம் புதுப்பித்தல் உட்பட வரி வருவாய் இனங்கள், வரி வருவாய் அல்லாத இனங்கள் / கட்டணங்கள் நடப்பு நிதி *(2019-20)* ஆண்டின் *31.03.2020*க்குள் சொத்து உரிமையாளர்கள்/நிறுவனதாரர்களால் சட்ட விதிகளின்படி செலுத்தப்பட வேண்டிய நிலையில், தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் *(Covid 19)* காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி வரி வருவாய் இனங்களை வசூலிக்க இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளதால், இந்த நிதி ஆண்டிற்கு *(2019-20)* செலுத்த வேண்டிய வரி வருவாய் இனங்களை (சொத்துவரி, தொழில்வரி உட்பட), எவ்வித தண்டத்தொகை விதிக்கப்படாமல் செலுத்த ஏதுவாக காலக்கெடு *30.06.2020*வரை நீட்டித்து வழங்குமாறு, ஆணையர் அவர்களின் *30.03.2020* நாளிட்ட கடிதம் மூலம் அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்ட நிலையில், அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.*141*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MA.IV)* துறை, நாள்: *23.04.2020*ல், கீழ்கண்டவாறு குறிப்பிட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

6. The Government after careful examination of the proposal of Commissioner of Municipal Administration, hereby order’s to defer the payment of taxes and dues to the Urban Local Bodies (All Corporations including Greater Chennai Corporation, Municipalities and Town Panchayats) and also the renewal of D&O Trade License arising up to March 2020 for 3 months till 30.06.2020, without levying any penalty in view of COVID-19.

மேற்படி அரசாணை எண்.*141*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MA.IV)* துறை, நாள்: *23.04.2020*ல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) செலுத்த வேண்டிய வரிகள், நிலுவைகள் (சொத்துவரி, தொழில் உரிமம் புதுப்பித்தல் உட்பட) அனைத்தும், எவ்வித தண்டத்தொகையும் விதிக்கப்படாமல் செலுத்துவதற்கு காலக்கெடு *30.06.2020* வரை ஒத்திவைத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளதால், மேற்படி அரசாணை விவரம் சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பார்வைக்காகவும் சமர்ப்பித்த ஆணையரது 30.04.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசாணை எண்.*141*. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MA.IV)* துறை, நாள்: *23.04.2020* விவரத்தை தகவலுக்காக சமர்ப்பித்த குறிப்பு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**F.A.C.No.B1/1802/2019**

**Resolution No.356 /2020** **Date:29-05-2020**

**Greater Chennai Corporation- Financial Management Unit – Covid-19 – Economy in Expenditure – Introduction of certain measures to control expenditure – To be implemented in GCC – For orders.**

In G.O.(Ms).No.249, Finance (Budget General-1) Department, Dt: 21.05.2020, it was stated that, the Revenue Receipts and the Revenue Expenditure assumed in the State Budget Estimates 2020-21 have been drastically affected by the unprecedend Covid-19 outbreak since March 2020. The Government is facing a huge shortfall in the receipts due to the Covid-19 pandemic and there are mounting additional expenditure commitments towards containment, prevention, relief and mitigation activities. The Government have made a detailed study of the current situation and are taking necessary action to minimize fiscal stress so that expenditure on welfare schemes and capital works are ensured to revive the economy.

Further, as part of the economy measures and resource mobilization efforts, the Government have ordered to curtail certain avoidable items of expenditure during the current financial year. Accordingly, the Government directed that the allocation made in the Budget Estimates 2020-21, under all the Demand for Grants, shall be reduced as per the cuts imposed against each object head indicated below :

| **Sl.No.** | **Heads** | **Percentage of Cut (out of B.E-2020-21)** |
|---|---|---|
| 1 | Office Expenses – Other Contingencies | 20% |
| 2 | Office Expenses – Furniture | 50% |
| 3 | Advertising and Publicity – Exhibition | 25% |
| 4 | Hospitality / Entertainment Expenditure | 50% |
| 5 | Machinery and Equipments – Purchase | 25% |
| 6 | Motor Vehicles – Purchase | 50% |
| 7 | Training | 50% |
| 8 | Printing Charges | 25% |
| 9 | Computer and Accessories – Purchase | 25% |
| 10 | Travelling Allowance and Daily Allowance | Details in G.O |
| 11 | Salaries – Travel Concession | Details in G.O (Deferred until further orders) |

Further, in para no.4 of the said Government Order, it has been stated that, the expenditure control measures ordered in the paragraphs 2 and 3 above shall be enforced strictly and scrupulously by the Departments of Secretariat, Heads of Departments and CEO of PSU, Autonomous Boards, Local Bodies, Universities, etc., The Secretaries to Government and Heads of Departments shall be personally responsible for enforcing the economy measures and shall give suitable instructions to the subordinate officers. They shall re-allot the budget provisions whenever required, to control and restrict the expenditure within the limit set in this Government Orders and ensure that no deviation from the economy measures cited occurs.

**F.A.C.No.B1/1802/2019**

Hence, to implement the above said Government Order in letter and spirit in Greater Chennai Corporation and to make necessary modification (as per Government Order) in the Greater Chennai Corporation Budget Estimates – 2020-21 and also to make necessary modification in online. Orders of the Special Officer- Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner’s Note dated.28.05.2020 is read.

**“Approved by Special Officer- Standing Committee (Taxation and Finance) and Council.”**

*******

**ம.அ1ந.க.எண்.சி1/ 2175 / 2020**

**தீர்மான எண்.357 / 2020** **நாள்:29-05-2020**

**மண்டலம்-1 (திருவொற்றியூர்) திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2020-2021, துப்புரவு பணி மேற்கொள்ளுதல் - பகுதி-1, 2 மற்றும் 3, கோட்டம்-1 முதல் 14 வரை தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் ஆறு மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேலும் ஆறு மாதம் 16.06.2020 முதல் 15.12.2020 வரை நீடிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குப்பட்ட திருவொற்றியூர், மண்டலம்-1ல் வார்டு1 முதல் 14 வரை உள்ள 14 வார்டுகளில் 1498 உட்புற சாலைகளும் 6 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் மக்கள் தொகை 2011ம் கணக்கின்படி 2,90,187 மக்கள் சுமார் 87,418 குடியிருப்புகளில் வசிக்கின்றனர்.

மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நாள்:11.12.2012 மற்றும் முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 02.02.2013 அன்று நடந்த ஆய்வு கூட்டத்தின் அறிவுறுத்தல்படி, அனைத்து மண்டலங்களிலும் வார்டுகளுக்கு தேவையான துப்புரவு பணியாளர்களை முழுவதுமாக நியமித்து துப்புரவு பணியை நூறு சதவிகிதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இம்மண்டலத்தில் தூய்மை பணி தொய்வில்லலாமல் மேற்கொள்ளவும் மற்றும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளவும் மேலும் இம்மண்டலத்தில் தோராயமாக உருவாகும் 175 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுவதற்கும் 1061 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இப்பணிகளை திறம்பட மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் NULM குழுக்கள் துப்புரவு பணியாளர்களை நியமித்து துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் தற்போது நிரந்தர தூய்மை பணியாளராக 181 பேர் மட்டுமே உள்ளனர். மீதமுள்ள 880 தூய்மை பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வார்டு-1 முதல் வார்டு-14 வரை, வார்டு வாரியாக நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் NULM குழுக்கள் மூலம் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின் வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

மண்டலம்-1 பகுதி-1,2 மற்றும் 3 கோட்டம் 1 முதல் 14 வரை

| வ. எண் | வார்டு எண் | தேவையான பணியாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் எண்ணிக்கை | தேவைப்படும் தினக்கூலி பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 91 | 19 | 72 |
| 2 | 2 | 91 | 19 | 72 |
| 3 | 3 | 82 | 23 | 59 |
| 4 | 4 | 74 | 24 | 50 |
| 5 | 5 | 106 | 20 | 86 |
| 6 | 6 | 96 | 25 | 71 |
| 7 | 7 | 74 | 11 | 63 |
| 8 | 8 | 70 | 18 | 52 |
| 9 | 9 | 76 | 22 | 54 |
| 10 | 10 | 62 | - | 62 |
| 11 | 11 | 82 | - | 82 |
| 12 | 12 | 50 | - | 50 |
| 13 | 13 | 53 | - | 53 |
| 14 | 14 | 54 | - | 54 |
| மொத்தம் | | 1061 | 181 | 880 |

**ம.அ1.ந.க.எண்.சி1/ 2175 / 2020**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல் முறை ஆணை எண் Ro.C.C2/ 7393 /2019, நாள்:16.05.2019 ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.379/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்றதீர்மான எண். 009/2020, நாள்: 08.01.2020ன்படி தற்போது இப்பணி ஆணை முடியும் தருவாயில் உள்ள காரணத்தினால் 16.06.2020 முதல் 15.12.2020 வரை ஆறு மாத காலத்திற்கு தூய்மை பணியினை தொய்வின்றி மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே, ஆறு மாத காலத்திற்கு தூய்மை பணியினை தொய்வின்றி மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணி நீட்டிப்பு வழங்க வேண்டியுள்ளது. முன்னதாக 16.12.2019 முதல் 15.06.2020 வரை 879 பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது . மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர் ஒருவர் பணியிடை காலமானதால் தற்போது 880 NULM பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் .

மேற்கண்டுள்ளவாறு வார்டு-1 முதல் 14 வரை தேவைப்படும், 880 துப்புரவு பணியாளர் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஆறு மாத காலத்திற்கு 16.06.2020 முதல் 15.12.2020 வரை பணியமர்த்த மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

மொத்தம் ஆறு மாதத்திற்கு ஆகும் செலவினம் விவரம்

880 நபர்கள் X 183 நாட்கள் X ரூ.379 (நாள் ஒன்றுக்கு) = ரூ.6,10,34,160/-

எனவே,

1. மண்டலம்-1, பகுதி-1,2 மற்றும் 3, கோட்டம்-1 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கு 880 தினக்கூலி துப்புரவு பணியாளர்களை 16.06.2020 முதல் 15.12.2020 வரை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும் மாவட்ட ஆட்சியர் அளித்துள்ள விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு ரூ.379/- வீதம் (880 நபர்கள் X 183 நாட்கள் X ரூ.379 ) ரூ.6,10,34,160 /- (ரூபாய் ஆறு கோடியே பத்து லட்சத்து முப்பத்தி நான்காயிரத்து நூற்றி அறுபதுமட்டும்) க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட 880 துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) பணியமர்த்தி கொள்ளவும்,

3. துப்புரவுத் துறையின் தலைப்பு எண்.40-41-03 கணக்கு குறியீடு எண்.230-150-100 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**மி.து.ந.க.எண்.சி.மே2/பி5/1223/2020.**

**தீர்மான எண்.358 / 2020** **நாள்:30-05-2020**

**மின்துறை – திடக்கழிவு மேலாண்மைத்துறை – மண்டலம் 8 CAP Yardல் -Bio CNG Plant - 630 kVA Transformer நிறுவி ,3 phase HT line With separate feeder power supply - TANGEDCOவில் இருந்து மின் இணைப்பு பெறுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைத் துறை, மண்டலம்-8, CAP Yardல் Bio CNG Plant வசதிகள் அமைக்க M/s Srinivas Waste management services (P) Ltd க்கு letter of acceptance வழங்கப்பட்டுள்ளது. செயலாக்கம் செய்ய Grinder & Conveyer, Hopper & Conveyer, Agitator, Digestive Tank, Purification System Area, Baloon, Compressor Unit, Slutty Storage tank, Solid liquid separator, Control room equipments & Lighting load போன்ற இயந்திரங்கள் தேவைப்படுகிறது. அவை மொத்தம் 488 KW திறன் கொண்டது. அதற்கு TANGEDCO வில் இருந்து 3 phase HT line with separate feeder power supply தேவைப்படுகிறது.

அதற்கு 630 kVA Transformer நிறுவி, இயந்திரங்கள் அமைத்து மற்றும் 3 phase HT line with separate feeder power supplyக்கான தோராய மதிப்பீடு கீழ்க்கண்டவாறு அட்டவணையிடப்பட்டுள்ளது.

| Sl. No | Name of Location | Power capacity Required | Power consumption details | Electrical Installations Required | Total Amount Inclusive of GST |
|---|---|---|---|---|---|
| 1 | CAP (Central Asphalic Plant )- Zone 8 | 630 KVA | 488 KW | 630 KVA Transformer with Necessary Panels | **9768600.00** |
| | | Grand Total Including GST | | | **9768600.00** |

எனவே, மேற்கண்ட CAP Yardல் செயலாக்க வசதிகளுக்கான 630 kVA Transformer நிறுவி, இயந்திரங்கள் அமைத்து மற்றும் 3 phase HT line with separate feeder power supply தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெற மின் பணிக்கு ஒப்பங்கள் கோர,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம்8ல் Bio CNG Plant செயலாக்கம் செய்ய 630 kVA Transformer நிறுவி, இயந்திரங்கள் அமைத்து மற்றும் 3 phase HT line with separate feeder power supply தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.97,68,600/- க்கு நிர்வாக அனுமதியும்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை திடக்கழிவுமேலாண்மைதுறையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.05.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

Resolution No.359 /2020 SUBJECT NOT PLACED